,, V. V. இராமசுவாமி நாடார் அவர்கள்
,, A. M. A. முருகப்ப செட்டியார் அவர்கள்
, உ. அ. அரு அருணசலம் செட்டியார் அவர்கள்
,, O. RM. O. M. SP. லெட்சுமணன் செட்டியாரவர்கள் (Late)
,, O. RM O. M. SP. L. மெய்யப்ப செட்டியார் அவர்கள்
,, Dr. T. D. கௌரிசங்கர், M. B., B. S., I. M. S. அவர்கள்
,, AR. A. RM. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள்
,, கான்பகதூர் சையத்முகமது சாயபு ராவுத்தரவர்கள் (Late)
,, V. S. K. காசிச்செட்டியார் அவர்கள்
,, AR. அருணசலம் அவர்கள்
,, M. S. A. M. பழநியப்ப செட்டியார் அவர்கள்
,, M. RM. S. பெரியணன் செட்டியார் அவர்கள்
,, கரு. முத்து. சிவலிங்கம் செட்டியார் அவர்கள்
,, அள. வீர. வீரப்ப செட்டியார் அவர்கள்
,, S. காதர்முகமது நயினர் அவர்கள் M. A. B. L.
,, P. ரெங்கசாமி நாயுடு அவர்கள் B. A. B. L.
,, N. M. R. சுப்பராமன் அவர்கள்
,, ஹாஜி முகம்மது மௌலானு சாகிப் அவர்கள்
,, K. S. முகம்மது அப்துல்காதர் ராவுத்தர் அவர்கள்

திரு. முனகால பட்டாபிராமய்யா அவர்கள்
,, ஆ. அ. ஆறுமுக நாடார் அவர்கள்

## செயலாளர்கள் :-

திரு. AR. அருணாசலம் அவர்கள்(மாவட்டக்கழக உறுப்பினர்)
,, மெ.பழ. சேவுகன் செட்டியார் அவர்கள்
,, V. அந்தோனிசாமி அவர்கள் B. A. (Hons) L. T.
,, கணபதிசுப்பிரமணிய அய்யர் அவர்கள்
,, M. ST. தண்ணீர்மலை அவர்கள்
,, PL. திருப்பதி செட்டியார் அவர்கள்
,, S. வஜ்ரவேலு அவர்கள்
,, M. காந்தி அவர்கள்
,, K. விஸ்வேஸ்வரன் அவர்கள்
,, சுப. நா. நாச்சியப்பன் அவர்கள்
,, R. அனந்தய்யங்கார் அவர்கள்
,, P. சோமசுந்தரம் அவர்கள்
,, அழகப்பா அண்ணாமலை அவர்கள்
,, திரு. கணபதி சுப்பிரமணியம் அவர்கள்
,, வெ. மு. மாணிக்கம் அவர்கள்
,, R. நாகராஜ் அவர்கள்
,, சி. என். வெங்கடாசலபதி அவர்கள்

## துணைச் செயலாளர்கள் :-

திரு. M. PL. சேவுகன் செட்டியார் அவர்கள்
,, D. கிருஷ்ணய்யர் அவர்கள்
,, M. S. T. தண்ணீர்மலையான் செட்டியார் அவர்கள்
,, PL. திருப்பதி செட்டியார் அவர்கள்
,, அழகப்பா அருணாசலம் அவர்கள்
,, அரு. இராமனாதன் அவர்கள்
,, M. ராமசாமி அவர்கள்
,, வெ. மு. மாணிக்கம் அவர்கள்
,, ச. வஜ்ரவேல் அவர்கள்
,, ராம. நா. நாகப்பன் அவர்கள்
,, K. S. வைகுண்டமய்யா அவர்கள் B. A. B. L.

## பொருளாளர்கள் :-

திரு. AR. அருணாசலம் அவர்கள்
,, M. RM. S. பெரியணன் செட்டியார் அவர்கள்
,, டாக்டர் A. ஜபார் அவர்கள்
,, P. M. அப்பணசாமி நாடார் அவர்கள்
,, T. AR. ST. AR. குப்பான் செட்டியார் அவர்கள்
,, அழ. மாணிக்கம் அவர்கள்
,, முரு. லெ. வீர. லெட்சுமணன் அவர்கள்
,, K. சுப்பையர் அவர்கள்
,, R. நாகராஜ் அவர்கள்

பண்டப் பாதுகாப்பாளர்கள் :- (குவார்ட்டர் மாஸ்டர்)

திரு. RM. சொக்கலிங்கம் அவர்கள்
,, AR. அருணாசலம் அவர்கள்
,, ராம. நா. லெ. நா. அழகப்பா அவர்கள்

கமிஷனர்கள் :-

திரு. M. A. சிதம்பரம் அவர்கள்
,, AL. AR. சோமநாதன் செட்டியார் அவர்கள்
,, P. சோமசுந்தரம் அவர்கள் B. A. L. T.
,, N. M. R. சுப்பராமன் அவர்கள்
திருமதி K. லெட்சுமி பாரதி அவர்கள்
,, A. V. ஜெயகர் அவர்கள்
,, டாக்டர் பிச்சமுத்து அம்மாள் அவர்கள்

துணைக் கமிஷனர்கள் :-

திரு. K. விஸ்வேஸ்வரன் அவர்கள் செட்டிநாடு சரகம்
,, கதி. அருணாசலம் அவர்கள் சிவகெங்கை சரகம்
,, K. S. சேஷாத்திரி அவர்கள் இராமனாதபுரம் சரகம்
,, M. V. மெய்யப்ப செட்டியார் அவர்கள்
,, ராம. நாச்சியப்பன் அவர்கள்
,, டாக்டர் R. பீம் சிங் அவர்கள்
,, A. மீனாட்சிசுந்தரம் அய்யர் அவர்கள் B. A. B. L.
,, E. D. பிலிப் அவர்கள் B. A.
,, T. N. பூமிநாதன் அவர்கள்,
,, P. சோமசுந்தரம் அவர்கள்
,, S. தேவபிரகாசம் அவர்கள் B. A., B. D.
,, S. N. P. ஆறுமுக கவிராஜ் அவர்கள் M. A.
,, N. ஜான்ஸ்டன் வில்லியம் அவர்கள்
,, V. M. V. பழநிச்சாமி அவர்கள்
,, S. M. AR. வீரப்ப செட்டியார் அவர்கள்
,, அ. கோபாலகிருஷ்ணய்யர் அவர்கள்
,, T. புருஷோத்தமன் அவர்கள்
,, K. S. ஸ்ரீகண்டன் அவர்கள் M. A.
,, R. ராமசாமி அய்யர் அவர்கள் B. A. B. L.
,, M. V. ராமச்சந்திரன் அவர்கள் M. A.
,, T. நடராஜன் அவர்கள் M. A.
,, C. R. நாராயணசாமி அவர்கள்

District Rover Scout Leader:-
ஸ்ரீ AR. அருணாசலம்

District Scout Master:-
ஸ்ரீ கதி. அருணாசலம்
ஸ்ரீ S. வஜ்ரவேல்

District Cub Master:-
ஸ்ரீ அழகப்பா அண்ணாமலை
ஸ்ரீ D. சபாஸ்டின்

District Organaising Commissioner:
C. N. சேதுராமன்
S. வஜ்ரவேல்

"You can be sure of SHELL"




Tel: AYYARAN

# Messrs. M. SV. RM. S. & Co.,

Managing Partner: **SV. M. Meyyappa Chettiar.**

Agents: BURMAH-SHELL,

**KARAIKUDI & ARANTANGI.**

Branches:

DEVAKOTTAI THIRUPPATTUR,
KOTTAIYUR, KANADUKATHAN,
PUDUVAYAL, KALLAL, KUNNAKUDI,
KOTTAMPATTI and PERAVURNI.

**All Burmah - Shell products are available at the above places.**

*Also Distributors for:*

Imperial Tobacco Co. of India Ltd.
Imperial Chemical Industries (India) Ltd.,
India Cements Ltd.

*Stockists:* Standard Batteries, all types of pneumatic tyres & tubes, Champion Spark Plugs.



# படைகளின் செய்தி

## பாரத பாரதி சாரணர் குழாம்

### நாட்டரசன்கோட்டை.

திரு. P. அய்யாத்துரை அய்யரை சாரண ஆசிரியராகவும், உதவியாள ராகத் திரு. K. நாராயண அய்யங்காரை யும் கொண்ட இப்படை 12-6-1938 ல் தொடங்கப்பெற்று சேவா சமிதி சாரண இயக்கத்தில் பதிவு செய்யப் பெற்றது. 29—8—53ல் இதன் சார ணப் பகுதி ஆரம்பிக்கப்பெற்றது.

இப்பொழுது 38 திரிசாரணர்களே யும், 14 சாரணர்களேயும் கொண்ட இக் குழாத்தின் படைப்பதியாக திரு. L. சுப்பிரமணியனும், திரிசாரணத் தலேவனுக திரு K. ராமநாதனும், உதவியாளராக திரு. AR. கண்ணப்ப னும், சாரணுசானுக திரு கண்ணப்பா ஸ்ரீனிவாசனும், உதவியாளராக திரு. RM. பழநியப்பனும் பொருப்பை ஏற்று நடத்திவருகின்றனர்.

எங்கள் படை பல சேவைகளில் கலந்துகொண்டதுடன் கொல்லங்குடி தூபி நீராட்டு விழாவில் சாரணர் முகா மின் முக்கிய நிருவாகப் பொருப்பை ஏற்று நடத்தியிருக்கிறது. 1953ல் எழு வர் மைசூருக்கு உல்லாசப் பிரயாணம சென்றுவந்தனர்.

## பாரதி படை, காரைக்குடி

திரு. அரு. அருணுசலத்தை (மாவட் டக் கழக உறுப்பினர்) படைப்பதியா கக் கொண்ட இப்படையை 8-9-1938ல் சேவா சமிதி தேசிய ஆர்கனேசிங் கமி ஷனர் திரு. ராம் பாஜ் பாய் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். இப்படை யின் மூலம் நூற்றுக்கணக்கான சார ணர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். எங் கள் படைப்பதி திரு அரு. அருணு சலம் எங்கள் படையின் வளர்ச்சி யோடு, இங்கு மாவட்ட சாரண சங்கத் தை அமைத்து அதன் வளர்ச்சியி லும் என்றும் முக்கிய பங்குகொண்டு பணியாற்றுவது குறிப்பிடத்தக்க ஒன்ருகும்.

ஊர்க்காவலில் முக்கிய பங்கு பெற்றதுடன், ராமேஸ்வரம் கால்நடை யாத்திரைக் கோஷ்டியில் கலந்து பணியாற்றியிருக்கிறூர்கள் பெஜண்ட் நூற்ருண்டுத் திரளில் நடைபெற்ற போட்டியில் எங்கள் படை திரு. சுப. நாச்சியப்பன் தனிப்பட்டோரில் முதன்மையாகவந்தமைக்கு வெள்ளிக் கோப்பை பரிசாகப் பெற்றுள்ளார். எங்கள் படையினர் சாரண மாத ஏடு களுக்கு கதைகள், கட்டுரைகள் முதலி யவை எழுதிவருகின்றனர்.

இப்பொழுது படைப் பதியாக திரு. அரு அருணுசலமும், திரிசார ணத் தலேவனுக திரு. அரு. இலக்குவ னும், துணேவராக திரு. ராம. சீனிவா சனும், சாரண ஆசானுக திரு. பழ. இராமசுவாமியும், துணேவர்களாக திரு. அ. இளவரசனும், திரு. அரு. மணியும், குவார்ட்டர் மாஸ்டராக திரு. மெ. பழ. சேவுகன் செட்டியாரும்

இருந்து பல முகாம்களிலும், சேவை களிலும் பங்கு பெற்று நன்கு பணி யாற்றி வருகிறார்கள்.

## முருகன் பாலவீரர்
## அறுப்புக்கோட்டை

சிவபானு க்ஷத்திரிய உயர்தர ஆரம்பப் பள்ளியில் 26-1-42ல் திரு. சுப்பிரமணியத்தை ஆசானாகக் கொண்டு முருகன் குருளை மங்கை தொடங்கப்பெற்றது. இன்றுவரை பாலவீரர் கூட்டம் சிறப்பாக செய லாற்றி வருகிறது. 1944ல் நடைபெற்ற அறுப்புக்கோட்டைச் சாரணத்திர ளில் முதன்மை ஸ்தானம் பெற்ற மைக்கு "டோட்டம்போல்" பரிசாகப் பெற்றது. மாநில சாரண அமைப்புக் கமிஷனர் திரு. ஜே. ஐ. முத்தையா மூன்றுமுறை குருளையர்களை பார்த்து பாராட்டியுள்ளார்.

## அரசர் உயர்நிலைப்பள்ளிச் சாரணப்படை, சிவகெங்கை

1919ல் திரு. ஜே. ரங்கசாமி அய் யரைத் தலைவராகக்கொண்டு ஆரம் பிக்கப்பெற்றது. திரு. எஸ். சோமசுந் தரம் பிள்ளை, திரு. பி சோமசுந்தர அய்யர் ஆகியோர் சாரண ஆசிரியர்க ளாகப் பணியாற்றியுள்ளனர்.

இப்பொழுது திரு. K.S. சேஷாத் திரி, திரு. S. அனந்தநாராயணன், திரு. D. I. லூர்துசாமி முதலியோர் இப்படையின் பொருப்பைத் திறம்பட நடத்திவருகின்றனர்.

பழங்கால முதற்கொண்டே சார ணீய வளர்ச்சிக்கு வேண்டுவன செய்து பல ஜாம்புரிகள் திரள்களில் கலந்துகொண்ட இப்படை சமீபத்தில் நடைபெற்ற ராஜா சர் நினைவுத்திரள் போட்டிகளில் முதன்மை ஸ்தானம் பெற்றிருக்கிறது. சிவகங்கை சாரணத் திரளில் இரண்டாம் இட மதிப்புக் கொடி பெற்றுள்ளது.

## திலகர் ரோவர் படை
## கோ. அளகாபுரி

1937ல் தொடக்கத்திலே தொண் டர் படையாகத் தோன்றி சேவா சமிதி இயக்கத்திலே ஊன்றி சாரணீய சங்கங்களிடையே ஏற்பட்ட மாற்றங் களுக்கேற்ப மாறுதலடைந்து பாரத் சாரணர் சங்கத்தில் பதிவுபெற்றிருக் கிறோம்.

ஐந்து பயிற்சிபெற்ற திரிசாரணர் களும அன்னாரில் ஒருவரை மாவட்ட உதவிக் கமிஷனராகவும் பெற்றிருக் கிறோம்.

குறிப்பிடத்தகுந்தவை:- படைத் தலைவரால் ராமேசுவர நடை யாத் திரை நிறுவப்பெற்றது. பல பிரிவுக ளாக இருந்த சாரண சங்கங்களின் பல குழுக்களையும் முதன்முறையாக ஒன்றாக இணைத்து கண்டனூர் பெரு மாள கோவில் கும்பாபிஷேகத்தில் சேவை செய்து வழிகாட்டினோம்.

## உலகநாயகி சாரணர் குழாம்
## கொத்தமங்கலம்

திரு. மு. கா அருணாசலத்தைப் படைப்பதியாகவும் திரு மு இராமநா தனை திரிசாரண ஆசானாகவும் கொண்ட இக்குழாம் 1—6—1940ல் தொடங்கப்பெற்று இந்துஸ்தான் சாரண சங்கத்தில் பதிவு செய்யப் பெற்றது. 1-7-40ல் திரு. A. S. சாமி நாதனை ஆசானாகக்கொண்டு பாலவீரர் பகுதியும் 5-10-46ல் திரு. ராம. லெ. அண்ணாமலையை ஆசானாகக்கொண்டு சாரணப் பகுதியும் தொடங்கப் பெற்றன.

இப்பொழுது 41 திரிசாரணர்களை யும், 21 சாரணர்களையும் கொண்ட இக் குழாத்தின் படைப்பதியாக திரு. அரு. ராமநாதனும், திரிசாரணத் தலை வராக திரு. அழகப்பா அருணாசலமும் உதவியாளராக திரு. எஸ். ராமையா வும், சாரணாசிரியராக திரு கதி. சின் னக்கருப்பனும், உதவியாளராக திரு.

எல். இராமையாவும் பொருப்பை ஏற்று நடத்திவருகின்றனர். திரு. கதி. அருணசலம் தலைமையில் எழுவரடங்கிய ஒரு குரூப் கமிட்டி இதன் நிர்வாகத்தைக் கவனித்து வருகிறது.

எங்கள் படையினர் மாவட்ட நிர்வாகத்தில் 1942 முதல் முக்கிய பங்கு கொண்டு உதவி வருகின்றனர். நான்குபேர் முதல்தர திரிசாரணச் சின்னம் பெற்றுள்ளர். எட்டு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கின்றனர்.

தமிழகத்தின் சாரணீயம் பரவ உதவும் வகையில் நாங்கள் நான்கு ஆண்டுகள் சாரணர் நாட்குறிப்பு வெளியிட்டு வந்திருக்கிறோம். பல சாரணத் திரளில் பங்குகொண்டு பரிசுகளும் பெற்றுள்ளோம்.

## ராமகிருஷ்ண ரோவர் குரு செட்டிநாடு

1—2—1941ல் ஏழு வாலிபர்களைக் கொண்ட இக்குழுவை, சாரணராக இருந்த காலத்தில் 1937ல் டில்லியில் நடைபெற்ற அகில இந்திய ஜாம்புரிக்குச் சென்றுவந்த திரு. N. P. கருப்பஞ் செட்டி ஆரம்பித்தார். இந்துஸ்தான் சாரணீயத்தின் ஓர் கிளையாகப் பதிவு செய்யப்பெற்றது. இப்பொழுது திரு RM. L. ராமநாதன் திரிசாரண ஆசானக் குழுவின் பொருப்பைக் கவனித்து வருகிறார். இடையில் சிறிது காலம் படையின் பொருப்பு திரு. V. முருகப்பனிடமிருந்தது.

பள்ளத்தூரில் நடைபெற்ற ராமநாதபுர மாவட்ட சாரணர் விளையாட்டுப் போட்டியில் முதன்மை ஸ்தானம் பெற்றது எங்கள் குழு. எங்கள் படையில் தோட்டப் பயிர்கள் செய்து வந்துள்ளோம். ஏழு திரிசாரணர் முதல் தரத் திரிசாரணச் சின்னம் பெற்றுள்ளனர்.

## இலக்குமி சாரணத் தொகுதி காரைக்காத்தான்

புதுக்கோட்டை டாக்டர் ஹைமன் தொகுதிச் சாரண ஆசிரியர் திரு. சா. அ. சின்னையா பிள்ளை அவர்களால் 22–5–47ல் சாரணர் பகுதி இந்திய வாலிப சாரணீய (Boy Scout) இயக்கக் கிளையாக ஆரம்பித்து வைக்கப் பெற்றது. திரு. அழ. அழகப்பன் சாரணசிரியராகவும், திரு. அரு. நாச்சியப்பன் உதவிச் சாரணசிரியராகவும் பணியாற்றினர். மூன்றாண்டுகளில் இதன் வளர்ச்சி சிறப்புற்று 26-1-50ல் திரிசாரணர், பாலவீரர் பகுதிகளும் தொடங்கப்பெற்றன.

இப்பொழுது தொகுத் தலைவனாக திரு. அழ. அழகப்பனும், திரிசாரணத் தலைவனாக திரு. க. வைத்திநாதனும், சாரண ஆசானாக திரு. நா. சின்னச்சாமியும், துணைவராக திரு. கா. பெரிச்சியப்பனும் பாலவீரர் ஆசானாக திரு. கரு. சந்திரனும் பணியாற்றி வருகின்றனர்.

தொகுதித் தொடக்கத்தில் திரு. அரு. நாச்சியப்பன் ஓராண்டு காலம் திரிசாரணத் தலைவராக பணியாற்றினார்கள்.

பாரத் சாரண சங்கம் தொடங்கிய பின் நம் மாவட்டத்தில் 6-10-51ல் நடைபெற்ற முதலாவது சாரணத் திரளான ராஜா சர் அண்ணாமலை செட்டியாரின் நினைவுச் சாரணத் திரளின் பொருப்பை ஏற்று கானாடுகாத்தானில் திறளைச் சிறப்பாகநடத்தினர்.

## சிவாஜி படை, காரைக்குடி

1928ல் இந்நகரில் உள்ள ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் உயர்நிலைப் பள்ளியில் இப்படை ஆரம்பிக்கப்பெற்றது. திரு. T. சீனிவாச அய்யங்கார் ஆரம்பமுதல் 1941 வரை சாரண ஆசிரியராக இருந்து பணியாற்றியுள்ளார். பின் திரு. A. ராமசாமி அய்யர். திரு. R. சுந்தரராஜ அய்யங்கார், திரு. K. S. இராதாகிருஷ்ணன் முதலியோர்களை ஆசிரியராகக் கொண்ட இப்படை பல முகாம்களிலும், சேவைகளிலும் கலந்து நற்பணி புரிந்து வருகிறது.

## கள்ளர் பள்ளி பாலவீரர் படை
## மங்காபுரம்

மங்காபுரம் கள்ளர் பள்ளியின் பால வீரர் படை 5—6—34ல் தொடங்கப்பெற்று வாலிபச் சாரண இயக்கத்தில் பதிவு செய்யப்பெற்றது. பயிற்சி பெற்ற பாலவீரர் ஆசான் திரு. S. கார்மேகம் அதன் பொருப்பை திறமையாக நடத்திவருகிறார். பல முகாம்கள் நடத்திய இப்படையைப் பல பெரியோர்கள் பார்த்து நல்லபிப்பிராயம் தந்துள்ளனர்.

## யுவ பாரத் சாரணர் குழாம்
## ஒ. சிறுவயல்

1937ல் 16 பேர்களைக் கொண்ட இப்படை நகரத்தார் ஸ்கௌட் குரூப் என்ற பெயரில் அவர்கள் ஆதரவில் தொடங்கப்பெற்றது. திரு. C. N. V. பதி, திரு. C. N. சேதுராமன் இருவரும் படையைப் பார்வையிட்டு இதனை இருபிரிவுகளாக செக்ஷன் 1 செக்ஷன் 2 என்று சேவா சமிதி சாரண இயக்கத்தில் பதிவுசெய்துகொண்டனர்.

இப்பொழுது சாரணப்பகுதிகள் மூன்றும் ஒருங்கே அமைக்கப்பெற்று 106 அங்கத்தினர்களையும் 8 பயிற்சி பெற்ற சாரண ஆசிரியர்களையும் கொண்டுள்ளது.

பொன்னழகி அம்பாள் உற்சவ சேவைக்காகத் தொடங்கப்பெற்ற இப்படை இப்பகுதி மட்டுமல்ல பக்கத்து மாவட்டங்களுக்கும் சென்று எண்ணற்ற பணிகள் புரிந்துள்ளது. பல சேவை முகாம்களின் தலைமை நிர்வாகத்தை ஏற்றுத் திறமையுடன் நடத்தியுள்ளது. ஆவுடையார்கோவில் போன்ற இடங்களிலும் முகாம் செய்துள்ளது.

எங்கள் நிலையத்தில் பொதுஜனங்கட்கு உபயோகப்படுமாறு பொது ரேடியோவும், வாசகசாலையும் இருந்து வருகின்றன. மருந்துகளும் வழங்கி வருகிறோம்.

## சக்தி சாரணர் குழாம்
## நேமத்தான்பட்டி

சக்தி சாரணர் குழாம் 1944ம் ஆண்டில் முத்துநாராயணனை படைப்பதியாகக்கொண்டு தோன்றி மறு ஆண்டில் குருளையர், சாரணர் பகுதிகள் ஆரம்பிக்கப்பட்டு 42 உறுப்பினர்களோடு பல சிறப்புக்களைப்பெற்றுள்ளது. புதுக்கோட்டை C. S. M. ஹைஸ்கூல் சாரண ஆசிரியர் திரு. சின்னையா பிள்ளையின் உதவியோடு வளர்ந்தது. தலைவர்கள் பலர் பார்வையிட்டுப் பாராட்டியுள்ளனர்.

## திரு. வி. க. சாரணர் தொகுதி
## காரைக்குடி

20—9—53ல் இளைஞர் பலர் முயற்சியின் காரணமாக தோற்றுவிக்கப்பெற்ற இத்தொகுதி திரு. மெ. காந்தி திரிசாரணத் தலைவராகவும், திரு. சு. அ. மெ. மெய்யப்பன் உதவி திரிசாரணத் தலைவராகவும் கொண்டு பல பொதுநலப்பணிகள் புரிந்துவருகிறது.

## சாத்தப்பா படை
## ஷண்முகநாதபுரம்

1940ல் தோன்றியது குருளையர், சாரணர், திரிசாரணர் என்ற முப்பகுதிகளும் மிக்க ஆர்வத்துடனும், திறமையுடனும் சேவை செய்து வந்தது. இதன் தலைவராக S. வெங்கடாதுரை அய்யங்காரும், சாரண ஆசிரியராக S. கிருஷ்ணமூர்த்தி அய்யங்காரும், குருளையர் ஆசிரியராக M. கொங்கராய பிள்ளையும் பணியாற்றினார்கள். இப்படையினர் பல இடங்களில் நடைபெற்ற முகாம்களிலும் கலந்துகொண்டு பணியாற்றினார்கள்.

★ ★

# பயிற்சிகள்

| இடம் | ஆண்டு | பயிற்சிகள் விபரம் | நிர்வாகி |
|---|---|---|---|
| திருப்புவனம் | 1927 | சாரணாசிரியர் மறுமுறைப்பயிற்சி | திரு. P. S. நாராயணசாமி B. A. L. T. |
| மேம்மால மேடு | 1934 | பாலவீர ஆசிரியர் & சாரணாசிரியர் | திரு. V. S. ரத்னசபாபதி |
| மதுரை | 1937 | சாரணாசிரியர் | திரு. S. R. வெங்கடராமன் |
| ,, | 1939 | பாலவீர ஆசிரியர் | திரு. V. S. ரத்னசபாபதி |
| காரைக்குடி | ,, | ,, | ,, |
| அ[illegible] கோவில் | 1940 | சாரணாசிரியர் | ,, |
| ,, | 1939 | சாரணாசிரியர் மறுமுறைப்பயிற்சி | ,, |
| ,, | ,, | சாரணாசிரியர் | திரு. M. ராஜகோபாலன் |
| தமிழ்பாடி தோட்டம் | 1940 | திரிசாரணத் தலைவர் | திரு. J. I. முத்தையா |
| காரைக்குடி | 1941 | பாலவீர ஆசிரியர் | திரு. V. S. ரத்னசபாபதி |
| பாண்டியன் கோட்டை | ,, | சாரண ஆசிரியர் | late திரு. T. S. வெங்கடராமன் |
| பொன்ன குழும் | 1942 | பாலவீர ஆசிரியர் | திரு. J. I. முத்தையா |
| அறப்புக் கோட்டை | 1943 | ,, | ,, ,, |
| இராமநாதபுரம் | 1944 & 45 | ,, | ,, ,, |
| காரைக்குடி | 1945 | திரிசாரணப் பயிற்சி | திரு. S. வஜ்ரவேலு |
| இராமநாதபுரம் | 1947 & 48 | பாலவீர ஆசிரியர் | திரு. J. I. முத்தையா |
| ஸ்ரீவில்லிபுத்தூர் | 1948 | பாலவீர ஆசிரியர் & சாரணாசிரியர் | ,, |
| ராஜபாளையம் | —— | சாரணாசிரியர் | ,, |
| பாண்டியன்கோட்டை | 1952 | ,, | திரு. M. ராஜகோபாலன் |
| காரைக்குடி | ,, | பாலவீர ஆசிரியர் மறுமுறைப்பயிற்சி | திரு. P. V. ராமகிருஷ்ணன் |
| திருவண்ணாமலை | 1953 | பாலவீர ஆசிரியர் | திரு. J. I. முத்தையா |
| சிவகெங்கை | 1954 | சாரணாசிரியர் மறுமுறைப்பயிற்சி & பாலவீரர் | திரு. T. N. பூமிநாதன் |



Girl Guides.

# நம் தல சங்கங்கள்

அருப்புக்கோட்டை: முன்பு திரு. பாளையம்பட்டி ஜமீன்தாரைத் தலைவராகவும், திரு டி. பி. ஞான கர தேவதாஸைச் செயலாளராகவும் கொண்டு சாரணீய முன்னேற்றத்திற்கு அரும் பணியாற்றி இருக்கிறது.

ஸ்ரீ வில்லிபுத்தூர்: முன்பு திரு. சேத்தூர் ஜமீன்தாரை தலைவராகவும், திரு. என். சுப்பிரமணியம் செயலாளராகவும் கொண்டு சாரணக் கலையை இப்பகுதியில் வளர்த்து வந்திருக்கிறது.

விருதுநகர்: முன்பு திரு. வி. வி. ராமசாமி நாடார் தலைவராகவும், திரு. ஏ. எம். திருவண்ணாமலை, திரு. வி. ஏ. சங்கரபாண்டியன் இருவரையும் செயலாளர்களாகவும் கொண்டு சீரிய பணியாற்றி வந்திருக்கிறது.

சிவகெங்கை: முன்பு சிவகெங்கை அரசரை தலைவராகவும், திரு. பி. சோமசுந்தரத்தை செயலாளராகவும் கொண்டு பயிற்சி முகாம் முதலியன நடத்தி சாரணத் தொண்டு புரிந்து வந்திருக்கிறது. 1952ல் திரு. ஜெ. ரெங்கசாமி அய்யரை தலைவராகவும், திரு. கே. எம். பிச்சாண்டியை செயலாளராகவும் கொண்டு தல சங்கம் நிறுவப்பெற்றது. இப்பொழுது இதன் தலைவராக திரு. வி. நல்லசாமி பிள்ளையும், செயலாளராக திரு. எஸ். சோமசுந்தரம் பிள்ளையும் பணியாற்றி வருகின்றனர். இச்சங்கம் பல பாலவீரர் திரள்களையும் மாவட்ட சாரணத் திரளையும் மறுமுறைப் பயிற்சிகளையும் தனது பொறுப்பில் நடத்தியிருக்கிறது.

கள்ளர் பகுதி: இப்பகுதியைச் சேர்ந்த படைகள் நான்கு நம் பகுதியில் பதிவு செய்து திறம்பட பணியாற்றி வருகின்றன. அதன் நிர்வாகிகளும் நம் படைகளுடன் ஒத்துழைத்து வருகின்றனர்.

1. St. லூதர்ஸ் கள்ளார் சாரணர் குழாம். C. S. M. போர்டிங்ஹோம் விருதுநகர்.
2. D. M. & R. லூதர்ஸ் குழாம், மிஷின் காம்பவுண்ட் D. M. & R. போர்டிங் ஸ்கூல், மானாமதுரை.
3. கள்ளார் பாலவீரர் கள்ளார் ஸ்கூல் No. 236 மங்காபுரம்.
4. கள்ளார் பாலவீரர் கள்ளார் ஸ்கூல் No. 245 சத்திரப்பட்டி.

P. B. No. 6. Tel: SEETHASOAP.

# " சீதா சோப் "

★ ஆடைகளின் வெண்மைக்கு நிகரற்றது

★ குணம் நிறைந்தது. விலை மலிந்தது.

★ எல்லோரும் நன்மதிப்பு அளிப்பது

★ சீதா சோப்

★

## " சீதா புளுமவுண்டன் பற்பொடி "

முகத்தை அழகுபடுத்துவது பற்கள்
பற்களை வெண்மைப்படுத்துவது நம்பற்பொடி
இன்றே முந்துங்கள். சீதா புளுமவுண்டன் பற்பொடியை
வாங்கி உபயோகித்து ஆனந்தியுங்கள்.

★

## " சீதா டாய்லெட் சோப் "

நறுமணம் தருவது நானிலம் புகழ்வது
அழகிய தோற்றம் அளிப்பது அன்பை ஊட்டுவது
ஆனந்தத்தை தருவது எங்கள் சீதா டாய்லெட் சோப்.

உரிமையாளர்:

**A. O. M. N. & SONS,**

விற்பனை நிலையம்:
ராஜாஜி ரோடு, காரைக்குடி.

கிளை: திருச்சி & குளித்தலை.

உ

# இராமநாதபுரம் மாவட்ட பாரத் சாரணர் சங்கத்திற்கு வேம்பத்தூர் கிராமப் பொதுமக்கள் வாசித்தளிக்கும்

# நன்றியிதழ்.

★

கற்கக் கசடற கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத்தக, என்ற
வள்ளுவன் வாக்கை வாழ்வில் கொண்டு
உள்ளும் புறமும் உலகும் ஊரும்
செல்வம் கொழிக்க சிறுமை போக்கி
அல்லும் பகலும் ஆவலாய் உழைத்து
உழைப்பின் பயனை உலகுக் குணர்த்தி
பிழைப்பின் வழியை பீடுறக் காட்டி
சாலையின் அமைப்பைச் சரிவரச் செய்து
வேலையின் உயர்வை விவரமாய்ச் சொல்லி
வறட்சி நீத்து வளமை கண்டு
புரட்சி புரிந்து புதுமை ஆக்கி
புன்னகை யுடனே புத்துணர் வூட்டி
'நன்னகை உழைப்பு' என்றதை நாட்டி
ஒற்றுமை ஊக்கி உழைக்கச் செய்து
கற்றறி கல்வியை காலத்தில் காட்டி
அரசியல் அலுவலர், அறிஞர் பல்லோரை
முரசுடன் காண முதலில் உதவிய
தோரணம் கட்டி தொல்லைகள் ஓட்டிய
சாரணர் இயக்கமே ஏற்க எம்நன்றி
சுத்தம் பேணி சுகவாழ்வு நடாத்த
நித்தம் உழைத்த நீர்வாழி பல்லூழி!

இவ்வண்

**கிராமப் பொதுமக்கள்,**

3—6—55

வேம்பத்தூர்.



Service Camp at Dharmapura Athinam. *4—9—43.*



Scout Officers at Kottaiyur, Kumbabishegam. *20—1—40.*

## உயர்திரு. பழ. மெ. பெரி. மெய்யப்பன் அவர்கள்

இயற்றிய

# வாழ்த்து ஆசிரியப்பா.

செந்தமிழ் நாட்டின் திலகமாய்த் திகழும்
அழகப்ப வள்ளலின் ஆசியைப் பெற்று
மலையில் விளக்கென மாண்புடன் விளங்கும்
சீரிய பண்புடைச் சென்னைமா காணச்
சாரணீயரின் சங்கக் கிளையாம்
நலம்புரி இராம நாத புரமாம்
மாவட்டந் தன்னில் வயங்கு சாரணர்
சங்கம் இன்றுநம் தனிப் பெருந்தலைவர்கள்
வாழ்த்தினைப் பெற்றே மகிழ்வுடன் அறிஞர்
வெள்ளி விழாவை மேன்மையாய் நடத்தும்
உன்னத நிலையில் ஓங்கி வளர்ந்து
வருவதே போன்று மன்னும் இச்சங்கம்
பற்பல தொண்டுகள் பணிவுடன் ஆற்றி
வளர்க சாரணீயம்! வாழ்க நீடூழி!!

சுபம்.

# இராமநாதபுரம் மாவட்டச் சாரணியக்கத்தின்

## இடைக்காலமும், இன்றையத் தேவையும்.

சி. என். சேதுராமன்.

---

உலகத் தலைச் சாரணர் பேடன் பவல் பெருமகனார் நிறுவிய வாலிபச் சாரணரியக்கம் இந்திய நாட்டின் பற்பல இடங்களில் விரைவாய்ப் பரவியது. இதற்குக் காரணம் இயக்கத்தின் சர்வமத சமரச நோக்கும், சகோதரத்துவ அடிப்படையும், சன்மார்க்க போதனைகளுமாகும். இத்தன்மைகள் அனைத்தும் இயக்கத்திலிருப்பினும், இதன் பயிற்சி முறைகளும், நிர்வாக அமைப்பும் நம் நாட்டின் தேவைக்குத் தகுந்தவாறு இல்லாத காரணத்தினால் முன்னேற்றக் கருத்துக்களைக் கொண்ட ஊழியர் பலர் காலஞ்சென்ற பண்டித மதன்மோகன் மாளவியாவைத் தலைவராய்க்கொண்டு "சேவா சமிதி வாலிபச் சாரணர் சங்கம்" நிறுவினர்.

இப்புதிய சங்கத்தின் கிளைகள் உத்தரப் பிரதேசத்திலிருந்து நாடு முழுதும் பரவி, சென்னைக் கிளையினால் 1936ம் ஆண்டில் சாரணாசிரியர் பயிற்சி முகாமொன்று அடையாரில் நடத்தப்பட்டது. தென்னிந்தியர் பலர் இம்முகாமில் பயிற்சிபெற நல்லதோர் வாய்ப்புக் கிடைத்தது.

பழம்பெரும் பாரதநாட்டில் அன்னியரின் ஆட்சியை எதிர்த்துப் பலமான போராட்டம் நடந்துவந்த காலம். ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அனுதாபிகள் எந்த உருவில் வந்தாலும் அவர்களை எடைபோட்டு மக்கள் ஒதுக்கித்தள்ளிய காலம். "நம் நாடு, நம் தலைவர்கள், நமது பண்பாடு," என்பனவற்றில் மக்களுக்குப் பற்றுதல் மிகுந்திருந்த காலம். அதிலும் செந்தமிழ் நாட்டில் இவ்வுணர்வு மேலோங்கி நின்ற சந்தர்ப்பம். நல்லனவற்றிற்கெல்லாம் நல்வரவு கூறிப் பேணிய தமிழகம், நாட்டுப்பற்றை நன்முறையில் புகட்டிவந்த நல்லோன் மாளவியாவின் சேவா சமிதி சாரணரியக்கத்தையும் ஆவலுடன் ஏற்கமுன் வந்தது. அகில இந்தியத் தலைமைப் பீடத்திலிருந்தும், சென்னையிலிருந்தும் இவ்வியக்கத்தின் பிரசாரகர்கள் கிளம்பி, சாரணீயத்தில் புதிய கருத்துக்களைப் பரப்பினர். இத்தருணத்தில்தான் மதுரை — ராமநாதபுரம் மாவட்ட சேவா சமிதி சாரணர் சங்கம் 1937ம் ஆண்டு, ஆகஸ்ட்டு மாதம் 21ம் நாள் மதுரையில் நிறுவப்பட்டது. பிரபல வழக்கறிஞரும், பொதுஜன ஊழியருமான திரு. கே. ஆர். வெங்கடராமய்யர், பி. ஏ. பி. எல். அவர்கள் இச்சங்கத்தின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மதுரை, திரு. ஆர். நாகராஜ், காலஞ்சென்ற திரு. சி. என். வெங்கடாசலபதி ஆகியோர் இச்சங்கம் தோன்றப் பெரிதும் காரணமாயிருந்தனர்.

மாவட்டத்தின் மேற்கூறிய இரு ஊழியர்களின் முயற்சியால் 1937ம் ஆண்டு, செப்டம்பர் மாதத்தில் மதுரையில் தற்காலம் பங்கஜம் கார்டன்ஸ் ("தினமணி" அச்சகம்) என வழங்கும் பிஷர் தோட்டத்தில் சாரணாசிரியர் பயிற்சி முகாமொன்று பத்து நாட்களுக்கு நடைபெற்றது. இம்முகாமில் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து இளைஞர் பலரும் வந்து பயிற்சி பெற்றனர். முதன்முதலில் தமிழகத்தில் நடந்த தேசியச் சாரணப் பயிற்சியில் அளவற்ற உற்சாகம் காரணமாக மொத்தம் எழுபது பேர் சேர்ந்துவிட்டனர். தற்சமயம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராய் விளங்கும் திரு. பி.

கக்கன். எம். பி. அவர்களும், அவரது பொதுப்பணித் தோழரும், மதுரை ஜில்லா ஹரிஜன் லீக் காரியதரிசியாக இக்காலம் இருந்துவருகின்றவரும், மதுரை நகரசபை, மாவட்டக் கழகம் ஆகியவற்றின் உறுப்பினருமாகிய திரு. பி. மருதையா அவர்களும், மதுரை நகரசபை முன்னாள் தலைவரும், சென்னை மாநில முனிசிபல் சேர்மன்கள் சேம்பரின் முன்னாள் தலைவருமாகிய திரு. டி. கே. ராமா, எம். எல். ஏ. அவர்களும், இராமநாதபுரம் மாவட்டச் சாரணர் சங்கச் செயலாளரும், மாவட்டக் கழக உறுப்பினரும், காரைக்குடி நகரசபையின் முன்னாள் வைஸ் சேர்மனுமாகிய திரு. அரு. அருணாசலன் அவர்களும், மற்றும் பிரபல பொது ஊழியர் பலரும் இம் முகாமில் பயிற்சிபெற்றனரென்பதை இன்று நினைத்தால் மாவட்டச் சாரணர் சங்கம் பெருமைப்பட நியாயமிருக்கின்றது.

மேற்கூறிய முகாமை யடுத்து சாரணாசிரியர், பாலவீர ஆசிரியர் ஆகியோருக்கு மேலும் ஐந்து பயிற்சி முகாம்கள் மதுரை — ராமநாதபுரம் மாவட்டச் சங்கத்தால் நடத்தப்பட்டன. விவரங்களை அனுபந்தத்தில் காணலாம். இம்முகாம்கள் பலவற்றிலும் இராமநாதபுரம் மாவட்ட வாசிகள் பலரும், விசேடமாக செட்டிமார் நாட்டு இளைஞரே பெரும்பாலும் கலந்துகொண்டனர். இவர்களின் ஆர்வம் காரணமாக காரைக்குடியிலும், செட்டிநாட்டின் ஏனைய ஊர்களிலுமாக இருபத்தேழு இடங்களில் புத்துணர்வுடன் கூடிய சாரணர், திரிசாரணர் படைகள் துவங்கப்பெற்றன.

தமிழ்நாட்டுச் சாரணரின் தேவைக்குத்தக்கவாறு சாரணீயப் பாடல்களும், ஊக்க ஒலிகளும் பிறமொழிகளில் இருந்ததைப்போன்று தமிழிலும் உருவாக்கப்பட்டன. சென்னை மாகாண முன்னாள் சாரண ஆர்கனைஸிங் கமிஷனர் திரு. எஸ். ஆர். வெங்கடராமன் பி. ஏ. பி. எல். அவர்கள் தொகுத்த "சாரணர் சிம்மநாதங்களும், பாட்டுகளும்," என்ற புத்தகம் தமிழில் மதுரை—ராமநாதபுரம் மாவட்டச் சங்கமே அச்சிட்டு வெளியிட்டது. 1940ம் ஆண்டில் தமிழில் மாதாந்திர செய்தித்தாளும் வெளியிடப்பட்டது.

சங்கம் துவங்கிய இரண்டாம் ஆண்டில் நாட்டிலுள்ள சாரணீய சங்கங்களின் ஒற்றுமைப் பிரச்னை கிளம்பி, வட்டமேஜை மகாநாடுகள் கூடியதன் விளைவாக சேவா சமிதி உட்பட பல சங்கங்கள் ஒன்றுசேர்ந்து "ஹிந்துஸ்தான் சாரணர் சங்கம்" உருவாயிற்று. இம்மாறுதலை யொட்டி 1938ம் ஆண்டில் எமது மாவட்டச் சங்கமும் பெயர் மாறியது.

செட்டிமார் நாட்டில் இயக்கம் காட்டுத்தீபோல் பரவியதென்றால் மிகையாகாது. உற்சாக மிக்க வாலிபர்கள் சேவையின் மகத்துவத்தையும், புதிய தேசீய விழிப்பையும் நன்குணர்ந்து சாரணீயப்பணியில மிகுந்த ஆர்வங்காட்டினர். ஒவ்வொரு ஊரிலும் இராக்காவல் வேலையை அந்தந்த ஊரின் செல்வாக்கு மிக்க குடும்பங்களிலிருந்துவந்த இளைஞரே ஏற்று அரும் பணி புரிந்து, திருட்டுப் பயத்தை ஒழித்தனர். படைகளின் எண்ணிக்கை அதிகரிக்கவே, காரைக்குடியில் உள்ளூர்ச் சாரணர் (லோக்கல்) சங்கம் ஒன்று 1938ம் ஆண்டின் இறுதியில் துவங்கப்பெற்றது. திரு. ஆரு. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் இதன் தலைவராயிருந்தனர். சாரணப் படைகளின் வேலைகளைக் கண்காணித்து வருவதற்கு கோட்டையூர் திரு. அளகப்பா அண்ணாமலை, மதுரை திரு. சி. என். சேதுராமன் ஆகியோர் மாவட்ட ஆர்கனைஸிங் ஸ்கவுட் மாஸ்டர்களாக நியமிக்கப்பட்டு, கௌரவ ஊழியராகத் தொண்டாற்றினர்.

மாவட்ட ஊழியர்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாய் நின்று உதவியது மேலிடத்துச் சாரணீயத் தலைவர்களின் வருகை. ஐக்கியமாகாண ஆர்கனைஸிங் கமிஷனர், திரு. டி. எல். ஆனந்த ராவ் அவர்கள் ஆரம்பத்திலும், அகில இந்திய ஹிந்துஸ்தான்

சாரணரின் ஆர்கனைஸிங் கமிஷனரும், இந்தியாவின் சாரணியத் தந்தையுமான பண்டித ஸ்ரீராம் பாஜ்பாய் அவர்களுடன், இந்திய ஊழியர் சங்கம் திரு. எஸ் ஆர். வெங்கடராமன் பி. ஏ. பி. எல். அவர்கள் ஒரு முறையும், பின்னர் சென்னை மாகாண சங்கத்தலைவர் கனம் வி. வி. கிரி அவர்களும், மதுரை ராமநாதபுரம் மாவட்ட சங்கத் தலைவர் (தற்காலம் ஒரிஸ்ஸா ராஜ்ப கவர்னராக விளங்கும்) திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்களும், சென்னை மாகாணக் காரியதரிசி திரு. வி. எஸ். ரத்னசபாபதி அவர்களும் இராமநாதபுரம் மாவட்டத்தில், காரைகுடி உள்ளூர்ச் சங்கத்தைச்சார்ந்த பற்பல சிற்றூர்களிலும் மூன்றுநாட்கள் சுற்றுப்பிரயாணம் செய்து, சாரணீயப் பிரசாரத்தைத் தீவிரமாய்ச் செய்தனர். சென்றவிடமெல்லாம் பொதுமக்களின் வரவேற்பும், ஆதரவும் அபரிமிதமாயிருந்தன. அந்தக்காலம் மீண்டும் திரும்பவேண்டும். ஆங்காங்கிருந்த திரிசாரணர் படைகளெல்லாம் மீண்டும் உயிர்த்தெழவேண்டும். நடிப்புத் திறமை மிக்க தீவட்ட நிகழச்சிகளும், தன்னலங்கருதா நற்பணிகளும் நாளும் நடைபெற்று மக்களுக்கு நன்மை பயக்கவேண்டும். தேவகோட்டை திரிசாரணர்களிலிருந்து ஒரு சின்ன அண்ணாமலை தோன்றி தேசப்பணி புரிகின்ற மாதிரி, மேலும் பல இளந்தலைவர்கள் தோன்றும் சந்தர்ப்பங்கள் உண்டாகவேண்டும். இது சாத்தியமே என்பதை சாரணீயத் துறையில் ஈடுபட்ட பலரும் அறிவார்கள். ஆனல் இதைச் சாதிக்க இடைவிடா உழைப்பும், பொதுஜன ஆதரவும் தேவை.

1941ம் ஆண்டுவரை மதுரை-ராமநாதபுரம் சங்கமாக இணைந்து செயலாற்றிய இத்தாபனம் இயற்கையான வளர்ச்சியின் காரணமாக அவ்வாண்டு அக்டோபர் மாத முதல் தனித்து இயங்கத் தொடங்கியது. நான்காண்டுகளில் இம்மாவட்டச் சாரணர்கள் பங்குகொண்ட சாரணர் ராலிகளும், பொதுப்பணிகளும் நூற்றுக்கணக்கானவை. முக்கியமாக கோவில் கும்பாபிஷேக விழாக்களின்போது திரிசாரணர்கள் பல ஊர்களிலிருந்தும் திரண்டு வந்து மக்களுக்குத் தொண்டுசெய்து நன்மதிப்பைப் பெற்றனர். தமது மாவட்டத்திற்கு வெளியிலும் சென்று சேவை செய்யும் வாய்ப்புகளுமிருந்தன.

வெள்ளிவிழாக் கொண்டாடும் இத்தருணத்தில் சாரணருலகில் எத்தனையோ மாறுதல்களைக் காண்கிறோம். பற்பல சங்கங்களும், பழைய வேற்றுமைகளும் இன்று கிடையாது. பையன்களுக்கும், பெண்களுக்கும் பயிற்சி முறைகள் வேருனலும் தலைமைத்தாபனம் ஒன்றே. உலகத்தின் கல்வித் துறை நிபுணர்கள் அனைவரும் இயக்கத்தின் நன்மை பற்றி ஒருமுகமாய்த் தீர்ப்பளிக்கின்றனர். இத்தகைய சிறந்த பயிற்சியை நம் பாரதப் பிரதமர் நேருஜி சொல்வதுபோல் நாட்டின் ஒவ்வொரு சிறுவனும், சிறுமியும் அடைவதற்குக் கைகொடுத்து உதவ வேண்டியது மாவட்டப் பெருமக்களின் கடமையாகும். தலைசிறந்த கல்வியாளர். திரு. ஆர். எம். அளகப்ப செட்டியாரவர்கள் நமது சென்னை மாநிலச் சாரணர்சங்கத்தின் தலைவராயிருந்து தொண்டாற்றி வருகின்ற உதாரணம் நம் முன் பளிச்செனத் தெரிகின்றது. கூடிய விரைவில் இராமநாதபுரம் மாவட்டம் சாரணீயத் துறையில் சென்னை மாநிலத்திற்கே உறைகல்லாக விளங்கவேண்டுமென்று விரும்புவோமாக.

# இராமனுதபுர மாவட்டம்

இராமனுதபுர மாவட்டம் 1910ம் ஆண்டில் இராமனுதபுரம் சிவகெங்கை ஜமீன் நிலப்பரப்புகளுடன் திருநெல்வேலி மாவட்டப் பகுதிகளாக இருந்த ஸ்ரீவில்லிப் புத்தூர் சாத்தூர் தாலுக்காக்களை இணைத்து அமைக்கப்பெற்றது. இதன் கலெக்டர் அலுவலகமும், மாவட்டக் கழகமும் (District Board) மாவட்ட நியாய ஸ்தலம் போலீஸ் சூப்பிரண்ட், கல்வி அதிகாரி அலுவலகங்கள் முதலியன மதுரையில் இருக்கின்றன. ரிசர்வ் போலீஸ் சிவகாசியிலும், மருத்துவ அதிகாரி D. M. O. இராமனுதபுரத்திலும், ரஸ்தா (High ways) மாவட்ட மத்திய நூலகம் சிவகெங்கையிலுமாக மாவட்ட மாஜிஸ்டிரேட் கோர்ட் தேவகோட்டையிலும் இருக்கின்றன.

இம் மாவட்டத்தின் ஒன்பது தாலுக்காக்களும் மூன்று டிவிஷன்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

சிவகாசி டிவிஷன்: சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் அறுப்புக்கோட்டைத் தாலுக்காக்கள்.

தேவகோட்டை டிவிஷன்: திருவாடானை, திருப்பத்தூர் சிவகெங்கைத் தாலுக்காக்கள்.

இராமனுதபுரம் டிவிஷன்: இராமனுதபுரம், பரமக்குடி முதுகுளத்தூர் தாலுக்காக்கள்.

மலைகள்: மேற்குத் தொடர்ச்சி மலையின் சிறு பகுதியும், பேய் மலை, கற்குளி மலை, கணவாய் மலை திருவண்ணமலை என்ற குன்றுகளுமிருக்கின்றன.

நதிகள்: வைகை, குண்டாறு, வைப்பாறு, வரிசலை ஆறு, திருமணிமுத்தாறு, அர்ச்சுன நதி என்ற காட்டாறுகள் ஓடுகின்றன. புதிதாக அரசாங்கம் ஏற்படுத்தும் வைகைத் திட்டத்தால் சிவகெங்கைப் பகுதிக்கு நீர்ப்பாசனவசதி ஏற்படும்.

ஏரிகள்: இராஜ சிங்க மங்கலம் ஏரி, கோபால சமுத்திரம் வத்ராயிருப்பு.

இப்பகுதி ஆந்திரம் பிரிந்த சென்னையின் ராயல சீமைப் பகுதியாக இருப்பதால் அரசாங்கம் தக்க கவனம் செலுத்தி முன்னேற்ற வேண்டும்.

★ ★

# சாரணக் கலை

சாரணீயத்தில் முக்கியமான பகுதி சேவையே. தன்னலங்கருதாச் சேவை. பிறர்க்குதவி புரிதலில் பேரின்பம் காணுதல். இப்பகுதியை நன்குணர்ந்து சேவையில் யாவரும் ஈடுபடுகின்றனர். சாரணீயம் சேவைக்கு மட்டும் அமைந்ததல்ல. அதைமட்டும் விரும்புவோர் சேவைக்காக அமைந்த தொண்டர்படை, செஞ்சிலுவை சேவா சமாஜ போன்ற எண்ணற்ற இயக்கங்களில் இணைதல் நலம் - சேவையுடன் ஏனைய கலைகளையும் கற்றலே சாரணீயம். முகாம் சென்று இயற்கையை அனுபவித்தல், தனிவழி செல்லல், புதுவழி வகுத்தல், பாலங் கட்டல், தன்னம்பிக்கை வளர்த்தல் போன்ற எண்ணற்ற கலைகளைப் பயின்று நாட்டின் நலனைப் பேணலே சாரணக் கலையாகும்.

# SV. RM. D. Bros

★

கியாரண்டியுள்ள

★★
★

பவுன் நகைகள்,

வெள்ளிப் பாத்திரங்களுக்கு

நம்பிக்கையான இடம்

★★
★

சிவ. ராம.

தனுஷ்கோடி செட்டி & பிரதர்ஸ்,

அம்மன் சன்னதி, காரைக்குடி.

இரும்பு, ஸ்குரூ, மரை ஆணிகள், பூட்டு, உயர்ந்த வார்னீஷ்,
நாகப் பைப்புகள், பெல்ஜியம் கண்ணுடிகள், டால்மியா
சிமிண்டு, ஷாலிமார்க் ஜென்ஸன் நிக்கல்ஸன், டூலகஸ்
யீட்டி மார்க்கு பெயின்ட் இனுமல் வகையரு சகல
சாமான்களும் விலை சகாயமாய்
கிடைக்கும்.

★

**சே. மீ. மு. தாவுத்பாக்ஷா ராவுத்தர்,**
ஷாப் & இரும்பு வியாபாரம், டைரக்ட் இம்போர்ட்டர்ஸ்,
கல்லுக்கட்டி தென்கரை,
காரைக்குடி.

**எல்லா பேனுக்களுக்கும் தகுதியுள்ளது**

★

**லிபர்ட்டி இங்க்**
(எல்லா கலர்களிலும் கிடைக்கும்)

★

குறிப்பு, பேரேடு, சிட்டை, டேபுக், பாக்கெட் நோட், பைல்புக்,
மற்றும் மாணவர்களுக்கு வேண்டிய பயிற்சி குறிப்பு
புத்தகங்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும்
விலை சகாயமாய் கிடைக்கும்.

**விஜயதேனு விலாஸ்,**
அக்கவுண்ட் புக்ஸ் & ஜெனரல் மெர்ச்செண்ட்ஸ்,
காரைக்குடி.

# "சேவை"

[சித்தாந்த சைவ வித்தகர் பாலகவி "இராமனாதன் செட்டியார், தேவகோட்டை.]

உலகத்திலே உள்ள உயிர்த் தொகுதிகளுள் சேவை புரியும் திறமில்லாதனவாக எவையுமில்லை. உயிர் வாழ்க்கை சேவையை அடிப்படையாகக் கொண்டிருப்பது என்று சொல்லலாம். சேவை என்ற சொல்லுக்கு "**உதவி**" என்பது பொதுவான பொருள். அதனுடைய சிறப்புப் பொருளை அறிந்துகொள்ளுவதற்கு சமயந்தான் துணைசெய்கின்றது.

உலகியலிற் சேவை என்பது என்ன பொருளிற் குறிக்கப்பெறுகின்றதோ; அதைவிடப் பல்லாற்றானும் சிறந்த பொருளுடையதாக அது சமயத் துறையிற் குறிக்கப்பெறும். உலகியல் பற்றிய எல்லாத்துறையிலும் பெருமதிப்பு வாய்ந்தவனாக இருக்கின்ற ஒருவன், அம்மதிப்புக்களனைத்தையும் மறந்து அவ்வெல்லாத் துறைகளிலும் தாழ்ந்த ஒருவனாகத் தன்னைக் கருதிக்கொண்டு செயலாற்றமுற்படுவதையே "**சேவை**" என்று சொல்லவேண்டும்.

உடல், பொருள், ஆவியாதிய உடைமைகளை இறைவனுக்கு ஆக்கி அவனை வழிபடுவதையே '**சேவிப்பது**" என்று சமயச் சான்றோர்கள் கூறுகின்றார்கள். அத்தகைய சேவை என்ற சொல்லைப் பயன்படுத்திக்கொண்டு உடம்பில் அழுக்குப்படாமல் செயலாற்றுபவர்களும் உலகில் இல்லாமலில்லை.

உண்மைச் சேவைக்கு உலகம் பெருமதிப்புக்கொடுத்துப் போற்றும். உலகத்துயிர்கள் அனைத்தும் உடம்பு வேறுபட்டால் ஒன்றிற்கொன்று உயர்வு தாழ்வு உடையனவாகக் காணப்படுகின்றனவே அன்றி, உயிரென்ற ஒருமைத் தன்மையில் அவை தம்முள் வேறுபாடு இல்லை.

இதனை உணர்ந்துதான் பண்டைக்காலத்தில் அறச்செயல்களை வகுத்துக்கூறிய ஆன்றோர்கள் "ஆவுரிஞ்சு தறிநடுத"லையும் ஒரு அறமாக வற்புறுத்தி வைத்தார்கள். "எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்" இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில் என்பது மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்ற வித்தகர் திருவாக்கு.

"ஊர்ப்பிள்ளையை ஊட்டிவளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்பது நம் நாட்டுப் பழமொழி. இது அடுத்தவருக்குச் சேவை செய்வதற்காகவே மனிதன் பிறந்திருக்கிறான் என்பதை வலியுறுத்துகின்றதல்லவா?

நம் நாட்டில் முன் நாட்களில் சேவையுணர்ச்சி அனைவரிடத்திலும் நிலைபெற்றிருந்தபடியினாலேதான் அவர்கள் வாழ்வில் எந்தக் குறைக்கும் இடமில்லாத நிலையிலிருந்து வந்தது. அப்பரடிகளுக்கு அமுது படைக்க, வாழைக்குருத்து அரிந்துவரும்படி அப்பூதியடிகள், தன் மைந்தனை மூத்த திருநாவுக்கரசுக்கு ஆணையிட்டார். அவ்வாணையை மேற்கொண்ட மூத்த திருநாவுக்கரசு நல்ல தாய், தந்தையேவ நானிது செய்யப்பெற்றேனென்று சேவை செய்யும் வாய்ப்புத் தனக்கும் உண்டாகச் செய்த பெற்றோர்களைப் பாராட்டியதாகச் சேக்கிழார் பெருமான் கூறுவார்.

சாரண இயக்கம் சேவை உணர்ச்சியால் மனப்பண்பாடு பெறுவதற்கு நல்ல துணை செய்கின்றது.

வாழ்க சாரணீயம்!

வளர்க சேவை உணர்ச்சி!

நலம் பெருக நம்நாடு.



Scout reception to Dr. and Mrs Subbarayan.

# "கிராம சேவை"

சோ. ஆனந்தநாராயணன்.

நமது நாட்டின் ஜீவன் கிராமங்களில் தான் அடங்கி உள்ளது. கிராம முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம். இதை நன்குணர்ந்தே நமது சுதந்திர சர்க்கார் பல சேம நலத் திட்டங்களை மேற்கொண்டுள்ளனர். இவற்றின் ஓர் பாகமாகத்தான் இயங்கின சென்ற கோடை விடுமுறைக் காலத்தில் ராஜ்யத்தின் பல பாகங்களில் சாரணர்களால் நடத்தப்பட்ட கிராம சேவை முகாம்கள்.

நமது மாவட்ட சாரண சங்கத்தின் ஆதரவில் சிவகங்கையில் இருந்து தென்மேற்கு 8 வது மைலிலுள்ள வேம்பத்தூர் கிராமத்தில் இத்தகைய முகாம் ஒன்று 15—5—'55 லிருந்து 4—6—55 வரை நடைபெற்றது. சேவை செய்வதையே குறிக்கோளாகக்கொண்ட சாரணர்கள் அதிக எண்ணிக்கையில் முன் வந்ததில் ஆச்சரியமில்லை. கிராமத்திற்கு வெளியேயுள்ள பரந்த வெளியில் அமைக்கப்பட்ட முகாமை மேமீ 15வ திரு. P. S. கிருஷ்ணசுவாமிஐயங்கார் M.L.A. அவர்கள் தலைமையில் திரு RM. சொக்கலிங்கம் செட்டியார் M. L. A. அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். அதுபோது மிளகனூர் சுவாமியார் திரு. இராமசாமி ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினர். நமது மாவட்டச் சாரண சங்க செயலாளர் திரு. அரு. அருணாசலம் அவர்களும், வேம்பத்தூர் பிரமுகர் சிவராமகிருஷ்ணய்யர் அவர்களும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. அன்றிரவே வந்துவிட்டது புயலும் மழையும். அடியுடன் சாய்ந்தன எங்கள் குடில்கள். இன்னல்களை எதிர்த்து புன்னகையுடன் போராடப் பயிற்சி பெற்றுள்ள சாரணர்களா மனம் கலங்குவர்? மறுநாளே ஆரம்பமாகிவிட்டது முகாம் சிரமைப்பு வேலை. புயலும் கூட ஓர் நன்மையையே செய்தது என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் கிராம மக்கள் ஒன்று திரண்டு எங்களுக்கு உதவி செய்வதில் முனைந்தனர். சேவை முகாமின் நோக்கமே கிராம மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியை உருவாக்கி நாகரீக வாழ்வில் ஊறிப்போன இளைஞர்களுடன் ஒன்றச் செய்வதுதானே? எடுத்த எடுப்பிலேயே இதில் வெற்றி கண்டது ஓர் சுப சூசகந்தான்.

முகாம் செவ்வனே வேலை துவங்கிவிட்டது. பல முகாம்களை அமைத்து அனுபவம் அடைந்துள்ள மாவட்ட சாரண ஆணையாளரும், உதவி ஆணையாளரும் முகாம் நிர்வாக இயந்திரத்தை நல்ல நிலையில் அமைத்து இயங்கச் செய்தனர். காலையில் 6 மணி முதல் இரவு 10-30 மணி வரை திட்டமிட்டபடி நிமிடம் பிசகாமல் சென்றது எங்கள் முகாம் வாழ்க்கை. முகாம் நிர்வாகத்தில் இளைஞர்களுக்கு அதிக பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டு, இளைஞர்களும் கடமை உணர்ச்சியுடன் அப்பொறுப்புகளை மேற்கொண்டனர்.

திட்டப்படி ரஸ்தா அமைப்பு வேலைகள் நிறைவேற்றப்பட்டன. நகரின் நடுமையத்தில் செல்லும் 4 பர்லாங்கு நீள ரஸ்தாவும், இடுகாட்டிற்குச் செல்லும் 2 பர்லாங்கு நீள ரஸ்தாவும் அமைக்கப்பட்டன. உள்ளூர்க் கோயிலைச் சுற்றியுள்ள புதர்கள் களையப்பட்டன. கிராமத்தின் சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்கும் குட்டை ஒன்றும் தூர்க்கப்பட்டது. இந்த வேலைகளைச் செய்வதில் இளைஞர்கள் காட்டிய ஆர்வத்தைக் கண்ணுற்றோர் நாட்டிற்கு இனி நல்லகாலம் பிறந்துவிட்டது என்பதை நிச்சயம் உணர்ந்தே இருப்பர். இளைஞர்களில் அநேகர் கல்லூரி மாணவர்கள் ஆயினும்

உழைப்பைக்கண்டு அஞ்சவில்லை. விடுமுறை நாட்களை வீணே கழிக்காமல் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்தனர். அதுமட்டுமா? அன்றொருநாள் நாங்கள் கண்டகாட்சி........ நாட்டின் எதிர்காலம் சுபிட்சமாகவே இருக்கும் என்பதை உணர்த்திய அந்தக் காட்சி........இன்னும் எங்கள் மனக்கண் முன்னரே நிற்கின்றது.

நூற்றுக்கணக்கான மக்கள்...... சிறியவர்களும் பெரியவர்களும் ஏன்? கிழவர்களும் கூட தோளில் மண்வெட்டியுடன் கிளம்பினர். நகரின் நடுவீதியை அகலமாக்கும் பணியில் ஈடுபட்டனர். அவரவர்கள் தாங்களே முன்வந்து படிக்கட்டுகளையும் வீட்டு முகடுகளையும் இடித்தனர். எங்கும் ஆர்வத்தீ கொழுந்துவிட்டு எரிந்தது. ஒற்றுமை நிலவியது. உட்பகைகள் ஒழிந்தன. ஒரேநாளில் ஒரு பர்லாங்கு நீள ரஸ்தா ஒழுங்குபடுத்தப்பட்டது. ஜனத்திரளின் சக்தியை அன்றுதான் கண்ணுற்றோம். மக்கள் சக்தி ஒன்று திரண்டால் மலையையே உருட்டிவிட முடியும் என்பதை உணர்ந்தோம். இத்தகைய எழுச்சியை, தன்னம்பிக்கையை கிராம மக்களிடையே உண்டாக்குவதே சேவை முகாமின் நோக்கம். இவ்வகையில் எங்கள் முகாம் நல்ல வெற்றிகண்டது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கிராம மக்களின் ஆர்வமானது மாவட்டக் கலெக்டர் R. R. விசுவாசம் இஞ்சினீயர் S. ஜெர்ஸ்டின் முதலிய பிரமுகர்களையும் இழுத்தது. எல்லோருமே கிராமத்திலேற்பட்ட விழிப்பைக் கண்டு வியந்தனர். முகாமும் செவ்வனே இயங்கியது. அதுமட்டுமா? சாரணப் பயிற்சி பெற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தையும் காட்டிவிட்டது. முகாமில் கட்டுப்பாடு உணர்ச்சி நிலவியதையும் கால அட்டவணைப்படி அணுவளவும் பிசகாமல் அன்றாட வேலைகள் நடந்ததையும் எல்லாவற்றிற்கும் மேலாக நல்ல உணவளித்தும் அளிக்கப்பட்ட பணத்தில் சிறிது மீதமாகும்படியே சிக்கனமாக முகாமை முடித்ததையும் தான் குறிப்பிடுகிறேன். பல முகாம்களையும் பார்வையிட்டு வந்த State organising-Commissioner திரு. M. ராஜகோபாலன் அவர்கள் மற்ற எந்த முகாமிலும் இல்லாத அளவிற்கு சாரணீயப் பண்புகளுக்கு ஒப்ப இந்த சேவை முகாம் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

முகாம் வெற்றிகரமாக முடிந்து அவரவர்கள் ஊர்களுக்குத் திரும்பும் கட்டம் நெருங்கியது. மூட்டை கட்டுவதில் அனைவரும் முனைந்தோம். மூன்று வாரங்கள் கடின வாழ்க்கை நடத்தியும் ஒருவருக்கும் உடல்நலம் குன்றவில்லை. அதற்கு மாறாக அநேகருக்கு எடைகூட அதிகமாக இருந்தது. இதற்குக் காரணம் சத்துள்ள உணவும் போதிய தேகப்பயிற்சியும் அளிக்கப்பட்டதே என்று கூறவும் வேண்டுமோ?

நாங்கள் வேம்பத்தூரிலிருந்தது சில நாட்களேயாயினும் அண்ணன் தம்பி முறை கொண்டாடுமளவிற்கு கிராமத்தாரிடையே நண்பர்கள் கிடைத்துவிட்டதால் பிரியும் நேரம் நெருங்க நெருங்க துக்கம்தான் மேலிட்டது. அமைதியான சூழ்நிலையிலிருந்து சலசலப்பு நிறைந்த நகரங்களுக்குத் திரும்பினோம். மனம் அங்கே. உடல் இங்கே. மறுபடியும் சேவை செய்ய எப்போது வாய்ப்புக் கிடைக்குமோ! அந்நன்னாளை எதிர் பார்க்கிறோம்.





Sri. C. V. CT. Venkatachalam Chettiar Ex. President.



Sri. O. M. SP. L. Meyyappa Chettiar, Ex. Vice President.



Sri. M. L. M.Mahalingam Chettiar, Ex. Vice President.



Late. Sri. S. O. SP. Odayappa Ex. Vice President.



Sri. P. R. Nagu,
Our Executive Mamber.



Sri. PL. M. PR. Meyyappa Chettiar.
Jubilee Quarter Master.



Sri. Balakavi Ramanathan Chettiar.



Sri. Nagaswamy Iyer.



19—9—54. Party given by Bharathi Group.
to Sri AR. Arunachalam Chettiar and Srimathi AR. Sigappi Achi
Members of the Ramanathapuram District Board.



Our Commissioners.



Rally, Kanadukathan.



Sri. S. M. AR. M. Veerappa Chettiar.
Ex. A. D. C



Sri. PL. Thiruppathi, Ex. Secretary

# சாரணர் வழி

ஸ்ரீ. சா. அ. சின்னையா, மாவட்டச் சாரணாசிரியர், புதுக்கோட்டை.

தன் சொந்த அலுவல் முதல் பொதுஜன வேலை வரையிலுமுள்ள சகல காரியங்களையும் செய்ய எது தூண்டுகோலோ, அதுதான் தன்னையும் தன் தேசத்தையும் முன்னேற்றும் முக்கியக் கருவி. அத்தூண்டுதல்க் கருவி யாதென ஆராயுங்கால் **சாரணீயமே** யன்றி பிரிதொன்றுமில்லை யென்பது என் அனுபவ உண்மை.

நாடு செழித்தோங்கவும், நாட்டின் மக்கள் இன்பமடையவும் புனருத்தாரணம் அவசியம். அந் நிலைமையை யடையுமுன் எதிர்ப்படும் இன்னல்களும் ஒருவகையில் பயனுள்ளவையே யெனக் கொள்ளலாம். ஏனெனில் இடையூறுகளை அகற்றும் வகைகளை சாரணர் அறியத் தருணம் வாய்க்கும். நாட்டிற்குப் புத்துயிரளித்து இன்பம் பரவச்செய்யும் பெரும் பேற்றை சாரணர்கள் பெறலாம். ஆனால் கட்சிச் சண்டைகளையும், வகுப்புப் பூசல்களையும் அறவே களைந்து பின் பொதுநலத் தொண்டியற்றுவதாற்றான் அப்பேற்றைப் பெறலாம்.

இவ்வுலக வாழ்க்கையை ஓர் பிரயாணத்திற்கு ஒப்பிடலாம். அழகிய புனல்களிற் செல்லும் உல்லாச ஓடப் பிரயாணம் போன்றது, பிள்ளைப் பருவம். கண்ணுக்கெட்டியவரை இனிய பலவும் நிரம்பிய காடுகளும், பசும் புற்றரையும் இன்னும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பலவகை இயற்கைத் தோற்றங்களும் நிறைந்துள்ளன. அறியா இளமை நீங்கி, இளம் காளைப்பருவம் அடைதலும், ஓடம் ஆற்றிலிருந்து திரை கடலிற் புகுதலும் ஒன்று போல்வன. கடல் அலைகளுடனும் சுழல்களுடனும் கூடியது. நிலையிலாக் காற்றும் வீசும். வாழ்க்கையில் எதிர்ப்படும் இடர்களும் சஞ்சலங்களும் இவைகள் போன்றனவே. இத்தகைய இடர்களைத் தவிர்க்கும் முறையை அறிதல் இன்றியமையாதது. இதற்கேற்ற சிறந்த முறையை நமக்களிப்பது சாரணீயமே.

சாரணீயம் சிறுவர்களிடமுள்ள சக்திகளைப் பெருக்கும் கல்வி முறை. 'ஒழுக்க வன்மையைப் பெருக்கும் இயக்கம். சாரணப் பயிற்சியின் முக்கிய தத்துவம் யாதெனில், சிறுவனது மனத் தோற்றங்களை ஊன்றிக் கவனித்து, அவன் தன்னிடமுள்ள அமசங்களைத் தானே பெருக்கிக்கொள்ளுமாறு உற்சாகப் படுத்துவதென்ற நுட்பமே. அவன்பால் யாதொரு முயற்சியுமின்றி நாமே அவனுக்கு ஞானத்தைப் புகட்டுவதென்பதில்லை. சிறுவர்கள் தங்களைத் தாங்களே பல துறைகளிலும் சீர்ப்படுத்திக் கொள்ளும் முறையைச் சாரணீயம் எடுத்துக் காட்டுகிறது.

சிறுவன் ஆவலுடன் எதிர் பார்ப்பது வெட்ட வெளி வாசம்தான். பாசறை வாசத்தின் மூலம் இயற்கையுடன் நேருக்கு நேரே பழகுகிறான். கடவுளின் மகிமைகளை அறிகிறான். இவைகளெல்லாம் இயற்கை ஞானத்தின் முக்கிய அம்சம். எவ்வகைப்பட்ட மதத்தினனாய் இருந்தாலும், அவனது மத விஷயத்தில் நம்மியக்கம் தலையிடுவதில்லை. ஆனால் எம்மதத்தைச் சார்ந்தவனோ, அதை நன்கு அனுசரிக்குமாறு நம்மியக்கம் அவனைத் தூண்டுகிறது.

சாரணப் பயிற்சிகள் எல்லைப்புற வாசிகளின் வாழ்க்கையிலுள்ள அமிசங்களைக் கொண்டது. அதாவது சம

யத்திற்குத் தக்க ஊக்கம், நீடித்து வேலை செய்யக்கூடிய உரம், துணிவு, நம்பத்தகுந்த தன்மை முதலியனவும், வீரர்களின் பரிவுடன் கூடிய சௌகர்யமும் சேர்ந்தது. இந்த அமிசங்கள் சிறுவர்களுக்கு வாழ்க்கையில் உபயோகிக்கக் கூடியவகையில் தாங்களே ஏற்று தினசரி அப்பியாச முறையில் பயிற்றுவிக்கப் படுகின்றன. வனவியல் (Wood craft) மர்மம், உற்று நோக்குதல், தடம் பற்றல், திசை யறிதல், சமைத்தல், வெட்ட வெளியில் வசித்தல், நட்சத்திரங்களை அறிதல், முதலுதவி புரிதல் ஆகியவற்றில் சிறுவன் தேற்சியடைந்து சிறந்த சாரணனாக இவ்வியக்கம் உதவுகின்றது.

சாரணப் பயிற்சி முறையின் சிறந்த முறை யாதெனில், விசேஷமாய் அணித் தலைவர்கள் மூலமாகவே பொறுப்பைச் சிறுவர்களுக்களித்தல். இதுதான் சாரணப் பயிற்சியின் இரகசியம். சாரணரியக்கம் எந்த வகுப்பையும் சார்ந்ததன்று. இதற்கு ஒரு பள்ளிக்கூடமோ, வகுப்போ, கால அட்டவணையோ, பரீட்சையோ கிடையாது. இது ராணுவப் பயிற்சியல்ல. ராணுவப்பயிற்சி சொந்த உணர்ச்சியை அழித்து விடுகிறது. கவாத்து ஒரு முறை அப்பியாசமானால் மறு முறை சிறுவர்களுக்கு அதில் வெறுப்புத் தட்டுகிறது. நமது நோக்கமோ சிறுவர்களைச் சிறந்த வனவாசிகளாக்க வேண்டுமென்பதே தவிர போலி வீரர்களாக்குவதல்ல.

நமது நவ இந்தியாவிற்கு சமுதாய சேவை தேவை. அவசியம். அதே நமது குறிக்கோளாகக் கொண்டு முயலவேண்டும். நமது வாழ்க்கை யெல்லாம் கற்கண்டானால், அது தெவிட்டும்; உப்பைத் தனியே உட்கொண்டால் கரிக்கும். மற்ற சுவையோடு—சமையலில்—கலந்தால் சுவை யளிக்கும். இன்னல்கள் வாழ்க்கைக்கு சுவையளிக்கும் உப்பெனலாம். இன்னல்களை மேற்கொண்டு, சமுதாயத் தொண்டாற்றி, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற உண்மையை நடைமுறையில் எடுத்துக் காட்டுவது சாரணியமே.

பணியாற்றுதலே இன்ப நெறி. 'நான் வாழ்வது பிறர்க்'கென கருதுவதே நிறையின்பம். இது கொடுக்கக் கொடுக்கக் குன்றாத அன்பின் ஓர் அமிசம். கதிர்கள் தன்னின்று இடையறாது பாயினும், தன் சக்தி குன்றாத இரேடியம் (Raduium) என்ற உலோகம் போன்றது நிறையின்பம். இவ்வின்பம் யாவர்க்கும் எட்டிய பொருளே. இன்பத்தின் ஒரு மிகச் சிறு பாகம் செயலற்றிருப்பதாலும், பெரும்பாகம் செய்கைகளாலும் அடையலாம். நமது வாழ்நாள் மிகச் சொற்பம். ஆதலின் வீண் பொழுது போக்காது, பயனுறும் செய்கைமுறைகளைக் கையாள வேண்டும். பொருளீட்டல் மட்டும் நிலையிலா யின்பம். தெய்வீகமான, நிலையான அழியா யின்பம் பயக்கும் செயல்களிலும் ஈடுபடல் வேண்டும். நற்பணிகள் யாவை என்றறிந்து, நல்ல வேளைக்குக் காத்திராமல் **உடனேயே** செய்து முடிக்க வேண்டும். சமுதாயப் பணியே நமக்களிக்கும் குன்றாயின்பம்.

நம் தலைமைச் சாரணர் — ஸர் ராபர்ட் பேதன் பவல்—நமக்கு விடும் தூது:—

" நானே என் வாழ்க்கையின் அந்திப் பொழுதை அடைந்தவன். கடிதில் உறங்கும் வேளை வந்திடும். நீயோ காலைப் பொழுதில் உள்ளவன். இன்னும் உச்சி வேளையும் நீண்ட நண்பகற் பொழுதும் முன்பு உள்ளன."

" என் வாழ்க்கையை யான் மிகவும் மன மகிழ்ச்சியுடன் கழித்தவன். மழையும் பனியும் இருந்தன. ஆயினும் கதிரவன் தன் பொன் கதிர்களைப் பரவச் செய்தான்."

" உன்னுடைய வாழ்நாள் எவ்வாறிருக்குமோ? இன்பம் நிரம்பியதாக்கும் சக்தி உன்னிடமே யுளது. நல்ல தசையை எதிர்பார்த்துக் கொண்டு வாளாயிருப்பவர்க்கு இன்பம் எக்காலத்தும் கிட்டாது. மத்தியான நேரத்

தில் உறங்குதலால் இன்பம் பெற முடியாது."

"விழித்துக்கொள்! சுறுசுறுப்பாயிரு!! உனக்குள்ளது இவ்வாறே ஒரு நாள்த்தான். ஆதலின் ஒரு விநாடியையும் வீணுக்காமல் பயனுள்ள பணிகளில் ஈடுபடவேண்டும்.

" சாரணப் பிரிவு உபசார முறையில் 'உனது பாடி வாழ்க்கை நலமுடையதாகுக' (Good camping) எனும் மொழிகளுடன் இதோ உன்னிடம் விடை பெற்றுக் கொள்ளுகிறேன்.

'இன்பமும் வெற்றியும் இனிது மேவுக' என்று எனது இருதய பூர்வமான வாழ்த்துடன் உன்னை வழியனுப்புகிறேன்."

★ ★

---

# தூவல் படம்

கதி. சுப்பையா உலகநாயகி சாரணர்குழாம், கொத்தமங்கலம்.

சாரணர்கள் தங்களின் ஓய்வு நேரங்களில் சிறு கைத்தொழில்களைச் செய்து அதனுல் ஊதியமும் பெறலாம். அவ்விதத் தொழில்களில் 'தூவல் படம்' ஒன்ருகும். இப்படங்கள் வாழ்த்து இதழ்கள் செய்வதற்கு பயன் படுவதுடன் அச்சு மாதரியாகவும், அழகாகவும், பார்ப்போர் மனதைக் கவரும் முறையிலும் இருக்கும்.

**வேண்டிய சாதனங்கள்**

தேய்ந்த பல் துலக்கும் பிரஷ், பேனுக்கட்டை, நிப்பு, மெழுகு, பழைய போஸ்ட் கார்டு அல்லது அதன் பருமனுமுள்ள அட்டை, மை, உபயோகமற்ற காகிதங்கள், கத்திரிக்கோல், பழைய பிளேடு.

## தயாரிக்கும் முறை

**முதற்பகுதி:-படம் வெட்டல்**

உபயோகப்படுத்திய போஸ்ட் கார்டை எடுத்துக்கொள் அல்லது அதன் பருமனுள்ள அட்டையை எடுத்துக்கொள் அதில் நிழல் படங்களை வரைந்து, பிளேடைக் கொண்டு திருத்தமாக வெட்டு. படம் வெட்டியவுடன் அதை வெய்யிலில் காட்டி அதன் நிழலைப் பார். அந்த நிழலும் நீ வரைந்த படமும் ஒத்துள்ளதா என்று பார். எப்பகுதி (படம் அல்லது காலியிடம்) மையில் வேண்டுமோ அப்பகுதியை வெட்டியெடுத்து விட வேண்டும்.

**இரண்டாம்பகுதி:-படம் வைத்தல்**

வெட்டிய படத்தை வெள்ளைத் தாளின் மத்தியில் வை. அது நழுவாதிருக்க படத்தைத் தாழுடன் சிறிது மெழுகுவைத்து ஒட்டு. பின்பு, படம் அசைகிறதா என்று பார். வேண்டாத பகுதிகளை உபயோகமற்ற பேப்பரை வைத்து மறைத்துவிடு.

**மூன்ரும் பகுதி:-தூவல் (SPRAY)**

பேனுக்கட்டையில் நிப்பைச் சொருகி மையில் தோய்த்து அந்தக் கட்டையை இடதுகையால் படத்தைப் பொருத்தி இருக்கும் பேப்பருக்கு மேல் இருக்குமாறு பிடித்துக்கொள்ள

வேண்டும். பின் பல்துலக்கும் பிரஷை நிப்பின் மேல், கீழ் முகம் நோக்கி உரசு. மை சிதறும். வேண்டிய அளவு மை விழுந்ததும் நிறுத்து. படம் அழகாக அமையும்.

படம் வெள்ளையாகவும், மற்ற பகுதி மையாகவும் இருக்க படத்தைச் சுற்றி மையடித்தால் அவ்விதம் வரும்.

படம் மையாகவும் பாக்கி இடம் வெள்ளையாகவும் இருக்க வேண்டுமானல் படப் பகுதியை வெட்டி எடுக்க வேண்டும்.

இடங்களுக்குத் தக்க கலர் மை போடலாம். இதில் இருந்து அவர் அவர்கள் முயற்சியே முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்.

# பள்ளிகளில் சாரணீயம்

M. J. ரெங்கஸாமி, M. A., L. T.,
(தலைமை ஆசிரியர், நகரத்தார் உயர்நிலைப் பள்ளி, தேவகோட்டை.)
மாவட்ட சங்க செயர்குழு உறுப்பினர்.

மாணவர்களிடை நல்ல பண்பாடுகள் உண்டாகி மிளிர்வதற்குச் சாரணர் பயிற்சி ஒரு உன்னதமான கருவியாகும். வாய்மை, வீரம், அன்பு, தன்னலங் கருதாத சேவை, சந்தோஷம், சுறுசுறுப்பு, உற்சாகம் முதலியன சாரணர்களிடை தோன்றி வளரும் உயரிய பண்புகளாகும். இன்னும் "யாதும் ஊரே, யாவருங் கேளிர்!'' என்ற கோட்பாட்டிற்கு இலக்காகவும், பரந்த அகில உலக மனப்பான்மையுடனும் சாரணர்கள் விளங்குகின்றனர். சாரணீய முகாமில் தங்கும் பாக்கியம் பெற்ற ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கையில் போற்றத்தகும் பெரும் மாறுதல்களைக் காண்பது யாவரும் அறிந்த உண்மை. இப்பயிற்சி பச்சிளங் குழந்தைகளுக்கும், உணர்ச்சி மிக்க வாலிபர்களுக்கும், அளவுகடந்த உத்சாகத்தையும், நல்லொழுக்கத்தையும் கொடுக்கும் ஓர் இன்னமுதாகும். சாரண மாணவர்கள் அழகிய உடையில் முகமலர்ச்சியுடன் தலை நிமிர்ந்து அணிவகுத்துச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும். அத்தகைய சாரணர் படைகள் நிரம்பியுள்ள தேசம் எத்துறையிலும் முன்னணியில் நிற்குமென்பதில் எவருக்கும் சிறிதும் ஐயம் இருக்காது.

இத்தன்மை வாய்ந்த சாரணீயம் பள்ளிகளில் சில ஆண்டுகளுக்கு முன் இருந்ததைப்போல் இப்பொழுது சிறப்புடன் விளங்காதது விசனிக்கத் தக்க விஷயமாகும். அரசாங்கமும், பள்ளி நிருவாகிகளும், பொது மக்களும் சாரணீயத்திற்குப் பேராதரவு அளித்து, அதை வளர்க்க வேண்டியது மிக மிக அவசியமாகும்.

"குடிமைப் பயிற்சி பள்ளிகளில் எல்லா மாணவருக்கும் கொடுக்கப்படுகிறது. சாரணீயத்தின் முக்கிய அம்சங்கள் அதில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆகலால் பள்ளிகளில் சாரணீயப் பயிற்சி அவசியமற்றதாகின்றது,'' என ஒருசிலர் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். ஆனல் அவ்வாறு கூறுபவர்கள் குடிமைப் பயிற்சிக்கும், சாரணீயத்திற்கு மிடையேயுள்ள அடிப்படை வித்தியாசங்களை மறந்தே இவ்விதம் கூறுகின்றனர் என நினைக்கிறேன். குடிமைப் பயிற்சி எல்லா மாணவருக்கும் கட்டாயமாகக் கற்பிக்கப்படு

கிறது. ஆனால் சாரணர் பயிற்சியோ ஆர்வமுடன் விரும்பி வருபவர்களுக்கே கொடுக்கப்படுகிறது. இதுவே குடிமைப் பயிற்சி நாம் எதிர்பார்க்கும் பலனை அளிக்காததற்கும், சாரணர் பயிற்சி எதிர் பார்ப்பதற்கு மேல் நல்ல பலனை அளிப்பதற்கும் காரணமாகும் என்பதை அவற்றில் அனுபவம் உள்ளவர்கள் ஒப்புக்கொள்வர். குடிமைப் பயிற்சி கட்டாய விளையாட்டுப் போலச் சுவையற்றும், சாரணீயம் 'இஷ்ட விளையாட்டு'ப்போல இன்பமயமாகவும் இருப்பதைக் காண்கிறோம்.

N. C. C. போன்ற துறைகளில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பல சலுகைகள் அளிக்கப்பட்டிருப்பதைப் போல் சாரணீய ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சில சலுகைகளை அரசாங்கமும், பள்ளி நிருவாகமும் அளிக்க முன் வந்தால் அது சாரணீயத்திற்குப் பேராதரவளிப்பதாகும்.

வளர்க சாரணீயம்!

வாழ்க பாரதமணித் திருநாடு!

---

# சிவகெங்கை ஸ்தல சங்கம்

**எஸ். சோமசுந்தரம் பிள்ளை, ஸ்தல சங்க செயலாளன், சிவகெங்கை.**

சேவையே சாரணீயத்தின் சின்னம், இளைஞருடைய உலகியல் அறிவு வளர்ச்சிக்கும் உறுதுணையாவது என்ற உண்மையை உணர்ந்து இற்றைக்கு சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரே சிவகெங்கையில் சாரணீயம் தொடங்கப்பெற்று நல்ல முறையில் மக்களுக்குப் பணியாற்றி வந்தது. சிவகெங்கை அரசர் காலஞ்சென்ற துரைசிங்க ராஜா அவர்களின் ஆதரவில் சாரணீயம் குன்றாத வளர்ச்சியடைந்து அண்மையில் உள்ள எல்லா மக்களுக்கும் சேவை செய்வதில் ஈடுபட்டது மன்னியில் சென்னையில் 1926 ம் வருஷம் நடந்த அகில இந்திய சாரண ஜம்பூரியிலும் நாட்டின் பல பகுதிகளிலும் கொண்டாடப்பட்ட விழாக்களிலும் கலந்து கொள்ளும் வாய்ப்புப் பெற்றது. துரைசிங்க ராஜா அவர்கள் பல ஆண்டுகள் சென்னை மாநில சாரணக் கழகத்தின் உபதலைவராய் இருந்து பணியாற்றி வந்தது பாராட்டத்தக்கது. சிவகங்கை ஸ்தல சாரண சங்கத்தினரும் சாரணீய வளர்ச்சிக்கு பலவாற்றாலும் உதவிபுரிந்து வந்தனர்.

இடையில் சில ஆண்டுகள் ஏதோ தவிர்க்கமுடியாத காரணங்களினால் இப்பகுதியில் சாரண வளர்ச்சி சிறிது தேக்கமடைந்திருந்தது. அண்மையில் நிறுவப்பெற்ற சிவகெங்கை ஸ்தல சாரண சங்கம் சாரணீயத்திற்கு புத்துயிர் கொடுத்து, ஊக்கமூட்டி, வளர்ச்சியடையச் செய்தது. இச்சங்கத்தின் அலுவல் சிவகெங்கை தாலூகா முழுவதும் விஸ்தரிக்கப்பெற்றது. அதன் பின் சிவகெங்கை தாலூகாவின் பல பகுதிகளிலும் சாரணக் குழுக்கள் பல அமைக்கப்பெற்று வளர்ச்சியடைந்து வருகின்றன. சென்ற இரண்டு ஆண்டுகளில் இந்தச் சங்கத்தின் ஆதரவில் ஜில்லாச் சாரணராலியும், தாலூகா ராலியும், நகர ராலியும், மறுமுறைப் பயிற்சிகளும் சாரண ஆசிரிய பயிற்சிகளும் நடைபெற்றிருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்வதில் பெருமிதம் கொள்வதற்கு இடமிருக்கிறது. சாரணீயமும் சாரணப் பண்பும் வளர்ச்சியடைந்து நாட்டிற்கு நற் சேவை செய்ய விரும்பும்.

★ ★

# பாரத தேச ஊழியர்கள்

அழகப்பா—அண்ணுமலை

['அங்கயற்கண்ணி மீனுக்ஷியே' என்ற மெட்டு]

பாரத சாரண சாரணீயர்
பாரத தேச ஊழியர்கள் (பாரத)

பல்லவி

நம்பிக்கை விசு வாசமும்
நாட்டியே சேவைசெய் சாரணர் (பாரத)

அநுபல்லவி

சகோதரத்துவம் மரியாதை
சார்ந்திடும் பண்புள்ள சாரணர்
ஒழுக்கத்துடன் என்னும் புன்னகையும்
உண்மையும் ஓங்கிய சாரணர் (பாரத)

தன்னடக்கம் அன்பும் வீரமும்
தாங்கிய பரோப காரமும்
நினைப்பிலும் சொல் செய்கையிலும்
நேர்மை நிறைந்த சாரணர் (பாரத)



Scout masters training Camp Mudangaiar.



Scout service at foundation of Somanathapuram Sanatorium. *14—10—49.*

# VIRUDHUNAGAR INDUSTRIAL WORKS.

For Purity

Use Tube Well Water

For Tube Well Pumps

Use V. I. W. Vaigai Pumps



Manufacturers of :- C. I. Weights, Well - Pulleys
Oil Rotary Chekku, Gas-plant Parts and
all kinds of grinders Bolts & Nuts
machinery parts etc. etc.

**Virudhunagar Industrial Works,**

Founders & Mechanics, Virudhunagar.

(S. INDIA)



Sri. V. V. Giri, Laid Foundation Stone of our Association Buildingat Devakotta Road on. 13—9—1940.

# My Reminiscences Of Scouting In Its Early Days.

*Sri. S. Nagaswami Iyer, Advocate.*
**SIVAGANGA.**

I am happy to record some old memories of the Scout movement in Sivaganga, probably the earliest in the district having had its beginnings in 1918.

My first interest in extra-curricular activities began in 1908 when a smart contingent of the Benaras Central Hindu College Cadet Corps led by the late Dr. G. S. Arundale, its Principal, arrived at the Thesophical Convention at Adyar, Madras. The services rendered by them then was the talk of the visitors for many days. When Dr. Beasant, that noble friend of the student world, found the doors of the Baden Powell Scout movement shut against the Indian youth, she began to organize with her characteristic skill and drive an independent movement in the state with the help of Mr. F. G. Pearce and Mr. J. Vincent Mendis of Ceylon.

A training Camp for scoutmasters held in December 1919 at Palayamkotta provided a good opportunity and the Headmaster of the Rajah's High School was induced to depute one of his assistants Mr. J. Rangaswami Iyer to take his training. On his return he was able to start a small troop of boys from the school and was successful in giving them intensive training in scoutcraft. The novelty of the course and the sense of freedom from the cramped atmosphere of the classroom stimulated their interest and they set about in dead earnest to falsify the forebodings of the cavilling teachers and parents. Though many of them could not afford to get their uniforms they more than made it up by their sterling qualities. They fully entered into the spirit of the camp life and the romance in hiking. They cheerfully put up with much discomfort. The long trek of 90 miles by two dozen scouts to Piranmalai hill and back will live long in the memory of all who took part in it. Boys of delicate constitution roughed it out in every way and put up with the rigours of long trudging on foot, late meals cooked by themselves and sleep on bare ground in open air even under inclement conditions. It only added to the fun of the game. It brought out their hidden talents for improvisation and resourcefulness. The camps enroute proved to be of great propaganda value and the histrionic talents of the boys discovered in the Camp-Fires were great and even surprising.

The town-people organized a representative committee to help the movement. The Panchayat Board equipped them with buckets and ropes for fire fighting and the local Medical Officer gave them training in First Aid. The activities that attracted the attention of the public were their life-saving work in drowning accidents and fire-out breaks which were all too frequent at that time. The coolness with which the scouts went about their fine fighting operations their organization, resourcefulness and bravery won them laurels. I was not surprised when on one occasion I arrived at a

place of accident with a contingent of scouts, and heard the solitary policeman complaining why these scout boys had not yet arrived. He had taken it for granted that the scouts alone were fit for such work.

The first troops of those days proved by their enthusiasm that the movement had great potentialities for devoloping character, intitative and resourcefulness. Many old scouts who are now occupying high positions feel highly thankful for having come under the movement in one stage or another. Speaking for myself, I can say that the infection I caught in those Rover days has enabled me to roam from Cape Camorin to the Himalayas. It has led me wandering over hill and dale, the highways and byways of India and Ceylon to commune with nature in all her aspects beautiful and terrible, pleasant and unpleasant, desert and snow clad mountains. The sight of two daring students from Pilani, Rajasthan at Garlyan, the last village in Bharat before entering Tibet, returning from a hard trip to Mount Kailas braving worst weather and brigands was an inspiration to me on my way to Mount Kailas. They were not down hearted albeit showing signs of the worst hardship. I wish that such scout spirit is developed in the boys of South India. If the movement does not drift into a school-boys show, as it threatens to become, it can still be the basis for a complete educational orientation from the lowest to the highest stage of studies tending a boy to become a complete man in due course.

I wish to conclude these rambling memories with a suggestion. There are many beauty spots in our district, on the river banks, hills and valleys and sea shore. It will be a nice thing if permanent camping grounds are secured and equipped for the use of Scouts and Guides in some of those places as it is done in U. S. A. and the European Countries. All India tours should be organised for selected parties of scouts and rovers. My four trips to Sabarimalai in the Travancore State were merely a repetition of the hiking and camping of the Piranmalai days. The hills of Travancore offer ample scope for life in the open among beautiful natural surroundings. I wish that scouts undertake such a trip next December. I can assure all of them that it will be an eye-opener to our scouts and scoutmasters in particular about the immense potentialities for testing and devoloping real scout spirit.

I wish the Silver Jubilee celebrations of the Bharat scouts and Guides of the Ramanathapuram district all suceess. Cheerio! Keep smiling.



# Scouting in Sivaganga by a Veteran Scout.

*J Rangaswami Ayyar.*

This ancient historic town of Sivaganga though small in size, has all along been a centre of glorious culture and great learning in this district. Every new idea was eagerly taken in, nurtured and translated into action by the elite of this town. It may truly be claimed that the history of scouting in the district is closely bound with the scout activities of this place. And so, it is no wonder that even in the year 1919, at a time when the scout movement had not gained a foothold in the State the first scout troop was formed in the Rajah's High School, some six years prior to the District Scout Council even I was in charge of the Troop then, having had my training under Mr. Mendis of Ceylon. The then headmaster took a personal interest in the running of the troop and I was ably assisted by Mr. S. Somasundaram Pillai, the present secretary of the Local Association. In those days many young men were imbued with the idea of service and got into our fold. Many of them seem to preserve that spirit of service and adventure even now. Otherwise how can I account for the spirit of adventure that took Mr. S. Nagasami Iyer, an old scout to the mountains of Kalias in his seventies or for the spirit of serviec that has imbued your present District Scout Commissioner Mr. P. Somasundaram Iyer who has been with the movement all these years through thick and thin showing extraordinary energy for a man of his age? Keen enthusiasm was evinced by one and all and no activity was hampered for want of funds. Our late Raja of Sivaganga distributed his patronage to the movement rather lavishly. He was himself a true scout participating in all our activities along with the boys and he had his son, the present Raja Sri D. Shanmugam trained as a scout. Under his kind patronage and munificience the movement grew from strength to strength throughout the district. I quite remember the several occasions when during the yearly Dasara festivities in his Estate he showed a partiality to the scout activities and displays thereby overlooking the other functions. When the then Prince of Wales visited Madras we were there in the Island grounds to give him a reception A contingent of 30 scouts from my Troop attended the International Scout Jamboree at Madras, in the year 1925 and on all these occasions we went with pomp and splendour, thanks to the munificence of our Patron. Our activities also included a lot of social service work. Not a week would pass without our attending a festival or putting out a fire outbreak. I understand and I am happy to learn that the School troop continues to show good work and maintain efficiency under its present leaders. What they lack now is finance and public support and I hope that the present Jubilee celebrations will evoke in the public a keen sense of their duty to give whole hearted support to such a noble cause. I wish the celebrations every success. Long live Scouting.



Farewell to AR. Arunachalam on 21—1—39.

under the Presidentship of Sri. T. Purushothaman (M. L. C.,) Our A. D. C.,

# OUR SERVICES



Scout Service—Iranıur Kumbabisham.





# குறிப்பிடத் தக்கவைகள்

31—7—29 to 7—8—29 ஸ்ரீ R. A. நாராயண அய்யங்கார் M. A. B. L. ஜில்லாக் கமிஷனர் லண்டனில் பிரிக்கன் ஹெட் ஆரோ பார்க்கில் நடைபெற்ற உலக ஜம்பூரியில் கலந்து கொண்டார்கள்.

25—8—39 இராமேஸ்வரத்திற்கு காரைக்குடியிலிருந்து கால்நடையாக சென்று ஆடி அமாவாசையில் சேவை செய்தார்கள்.

1—9—43 to 5—9—43 தருமபுர ஆதீனம் 10 ஆண்டு ஆட்சிக்கு 50 சாரணர்கள் ஸ்ரீ அருணாசலம் தலைமையில் சென்று வந்தார்கள்.

26—2—45 கும்பகோணம் மகாமகத்தில் நமது சாரணர்கள் சென்று திறம்பட சேவை செய்தார்கள். AR. அருணாசலம் Deputy camp commandent ஆக பணியாற்றினர்.

20 to 26—7—45 பெஜவாடாவில் கிருஷ்ணாநதி தீரத்தில் நடைபெற்ற கும்பமேளாவிற்கு நமது சாரணர்கள் ஸ்ரீ அரு. அருணாசலம் D. R. S. L. தலைமையில் சென்று வந்தார்கள். நாகபட்டிணம் டிவிஷனல் முகாமிற்கு நமது பகுதி சாரணர்கள் ஸ்ரீ கதி. அருணாசலம் D. S. M. தலைமையில் சென்று வந்தார்கள்.

16 to 20—1—46 வடலூர் ராமலிங்க சுவாமிகள் ஜோதி தர்சனத்துக்கு காரியதரிசி ஸ்ரீ பழ. திருப்பதி தலைமையில் சென்று வந்தார்கள். 52ம் வருடம் ஜனவரி மீ த்தில் திருவாவடுதுறையில் டிவிஷனல் முகாமிற்கு நமது பகுதி சாரணர்கள் ஸ்ரீ K. விஸ்வேஸ்வரன் தலைமையில் சென்று வந்தார்கள்.

27—10—52 to 31—10—52 புது டில்லியில் நடைபெற்ற மகாநாட்டிற்கு சென்னை ராஜ்ய கோஷ்டியின் தலைவராக நம் உதவிக் கமிஷனர் ஸ்ரீவில்லிபுத்தூர் ஜான்ஸ்டன் வில்லியம்ஸ் சென்று வந்தார்கள்.

7—1—53 to 11—1—53 லோயர் அணைக்கட்டில் நடந்த டிவிஷனல் முகாமில் நமது பகுதியிலிருந்து ஏராளமான சாரணர்கள் சோமசுந்தரம் B. A. L. T. தலைமையில் சென்று வந்தார்கள்.

29—12—53 to 2—1—54 ஹைதராபாத்தில் நடந்த அகில இந்திய சாரணமேளாவிற்கு ஸ்ரீ K. விஸ்வேஸ்வரன் ஸ்ரீ அழகப்பா அண்ணாமலை இருவரும் சென்று வந்தார்கள்.

13—4—54 to 4—5—54 நாட்டரசன் கோட்டையில் நடைபெற்ற களியாட்ட விழாவில் 22 நாட்கள் சேவை செய்தார்கள்.

2—10—54 கல்லுப்பட்டி (காரைக்குடி)யில் க்ஷேமநல அபிவிருத்தி திட்டத்தின் கீழ (Community Project) 100 சாரணர்கள் ரோடு போடும் சேவையை மேற்கொண்டார்கள்.

15—5—55 to 4—6—55 வேம்பத்தூரில் 21 தினங்கள் முகாம் செய்து ரோடு போட்டு கிராம மக்களுக்கு சுகாதாரம், கல்வி, விளையாட்டு முதலியன போதித்து, சாரணர்கள் நல்ல பயிற்சி பெற்றனர்.

# திரள்களும் மாநாடுகளும்

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | 9 | 38 | காரைக்குடி | பண்டிட் ஸ்ரீ ராம் பாஜ்பாய் விஜயம் |
| 23 | 10 | 39 | காரைக்குடி | கல்விமந்திரி ஸ்ரீ C. J. வர்க்கி விஜயம் |
| 19 | 9 | 43 | ஸ்ரீவில்லிபுத்தூர் | பாலவீரர் திரள் |
| 27 | 11 | 43 | மதுரை | சாரணத்திரள் |
| 18 | 7 | 44 | சிவகெங்கை | ,, |
| 31 | 3 | 45 | சிவகாசி | ,, |
| 28 | 10 | 45 | கண்டரமாணிக்கம் | சாரணர் மகாநாடு |
| 21 | 12 | 45 | கண்டனூர் | Dr. S. R. V. சாவூர் M. A. |
| | | 46 | பள்ளத்தூர் | மாவட் சாரணப்போட்டி |
| 29 12 47 to 31 12 47 | | | குன்னக்குடி | அன்[illegible]பெஸன்ட் நூறாவது ஆண்டுவிழா |
| 8 | 4 | 51 | சிவகெங்கை | I பாலவீரர்திரள் |
| 29 | 4 | 51 | கொத்தமங்கலம் | ,, |
| 13 | 8 | 51 | ஸ்ரீவில்லிபுத்தூர் | ,, |
| 7 | 10 | 51 | கானாடுகாத்தான் | ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் நினைவு சாரணத்திரள் |
| 19 | 2 | 52 | காரைக்குடி | பாலவீரர், சாரண, திரிசாரணத்திரள் |
| 2 | 4 | 52 | சிவகெங்கை | II பாலவீரர் திரள் |
| 15 | 8 | 52 | காரைக்குடி | சாரண, திரிசாரணப் பயிற்சிகள் |
| 7 | 12 | 52 | காரைக்குடி | பாலவீரர் திரள் |
| 22 3 53 to 23 3 53 | | | ஸ்ரீவில்லிப்புத்தூர் | ஜில்லா ராலி |
| | | | சிவகெங்கை | பாலவீரர் காட்சி |
| 1 | 11 | 53 | காரைக்குடி | பாலவீரர் திரள் |
| 26 | 1 | 54 | காரைக்குடி | பாலவீரர் திரள் |
| 9 1 54 to 10 1 54 | | | சிவகெங்கை | மாவட்ட சாரணத்திரள் |

# தலைவர்கள் வருகை

| | |
|---|---|
| 1938 | வருடம் பண்டிட் ஸ்ரீ ராம்பாஜ் பாய் அவர்கள் சேவாசமிதி ஆர்கனைசிங் கமிஷனர் |
| 1940 | மாகாண சங்கத் தலைவர் ஸ்ரீ V. V. கிரி |
| 1948 | பிரதமர் நேருஜி |
| 14—10—49 | சென்னை கவர்னர் ஸ்ரீ பவநகர் மகாராஜா |
| 24—10—52 | முதலமைச்சர் ராஜாஜி |
| [illegible]4— 1—53 | உதவி ஜனாதிபதி Dr. Sir. S. [illegible]தாகிருஷ்ணன் |
| 9—2—53 | ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத். |

# நமது சேவை

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | 6 | 38 | பலவான்குடி | கும்பாபிஷேகம் |
| 12 | 9 | 38 | நாட்டரசன்கோட்டை | ,, |
| 1 | 2 | 39 | கண்டனூர் பெருமாள்கோவில் | ,, |
| 28 | 5 | 39 | இளையத்தாங்குடி | ,, |
| 20 | 1 | 40 | கோட்டையூர் | ,, |
| 16 | 6 | 40 | கொல்லங்குடி | ,, |
| 16 | 6 | 40 | கண்டரமாணிக்கம் | ,, |
| 16 | 6 | 40 | திருவெண்காடு | ,, |
| 10 | 7 | 40 | பழநி | ,, |
| 8 | 2 | 41 | ஆ. தெக்கூர் | ,, |
| 8 | 2 | 41 | அலவாக்கோட்டை | ,, |
| 24 | 6 | 41 | திருச்செந்தூர் | ,, |
| 4 | 5 | 44 | அரிமளம் | ,, |
| 31 | 1 | 44 | இரணிக்கோவில் | ,, |
| 26 | 2 | 45 | கும்பகோணம் | மகாமகம் |
| 5 | 7 | 46 | கொத்தமங்கலம் பெருமாள் கோவில் | கும்பாபிஷேகம் |
| 4 | 2 | 49 | மாற்றூர் | ,, |
| 27 | 8 | 53 | திருவாடானை | ,, |
| | | | திருக்கொள்ளம்புதூர் | ,, |
| | | | வேலங்குடி | ,, |
| | | | வேதாரண்யம் | ,, |
| 28 | 10 | 53 | காரைக்குடி | ,, |
| | | | தேவகோட்டை | ,, |
| | | | கொத்தமங்கலம் | ,, |



Our A. D. C.



Road Making.

# பதிவாகியிருக்கும் படைகளின் விபரம்.

| பதிவு எண் | | எண்ணும், ஊரும் | பெயர், விலாசம். |
|---|---|---|---|
| 1 | I | பரமக்குடி | சேதுபதி சாரணர் குழாம் R. S. போர்டு ஹைஸ்கூல் |
| 2 | I | கீழச்சிவல்பட்டி | மீனாட்சி திரிசாரணர் குழு |
| 3 | I | ஸ்ரீவில்லிபுத்தூர் | இந்து உயர்நிலை ஆரம்பப்பள்ளி பாலவீரர் |
| 4 | I | சிவகெங்கை | நடேசஞ்செட்டியார் சாரணர் குழாம AR. N. C. ஸ்கூல் |
| 5 | II | ,, | இராஜா துரைசிங்கம் பாலவீரர் ராஜா ஆரம்பப்பள்ளி |
| 6 | III | ,, | விவேகானந்தா பாலவீரர் ஸ்வாமி விவேகானந்தா ஆரம்பப்பள்ளி |
| 7 | I | விருதுநகர் | நியூட்டன் சாரணர் K. V. S. High School |
| 8 | II | ,, | நவ்ரோஜி சாரணர் C. S. M. உயர்தர ஆரம்பப்பள்ளி |
| 9 | III | ,, | சுப்பையா நாடார் சாரணர் குழாம் S. S. S. முனிசிபல் உயர்நிலைப்பள்ளி |
| 10 | IV | ,, | விவேகானந்தா சாரணர் படை |
| 11 | V | ,, | படேல் க்ஷத்திரிய வித்தியாசாலை சாரணர்குழு |
| 12 | I | நாட்டரசன்கோட்டை | பாரத பாரதி குழாம் |
| 13 | II | ,, | S. RM. உயர்நிலைப்பள்ளி சாரணர் படை |
| 14 | I | கமுதி | நேதாஜி சாரணர் படை K. N. H. ஆரம்பப்பள்ளி |
| 15 | I | மானமதுரை | சூர்யநாராயண பாலவீரர் சூர்யநாராயண சாஸ்திரி பள்ளி |
| 16 | I | காரைக்குடி | பாரதி குழாம் |
| 17 | II | ,, | முத்து திரிசாரணர் குழு முத்துப்பட்டணம் |
| 18 | I | அருப்புக்கோட்டை | முருகன் பாலவீரர் S. B. K. உயர்தர ஆரம்பப்பள்ளி |
| 19 | I | தேவகோட்டை | தேபிரித்தோ சாரணர்படை தேபிரித்தோ உயர்நிலைப்பள்ளி |
| 20 | II | மானமதுரை | சிவாஜி பாலவீரர் O. V. C. ஆரம்பப்பள்ளி |
| 21 | I | மண்டபம்காம்ப் | M. C. உயர்தர ஆரம்பப்பள்ளி சாரணர் குழாம் |
| 22 | I | சாத்தூர் | தாகூர் சாரணர் படை S. H. N. எட்வர்ட் உயர்நிலைப்பள்ளி |
| 23 | II | தேவகோட்டை | வ. உ. சிதம்பரம் பிள்ளை சாரணர் படை 6-வது வார்ட் முனிசிபல் ஸ்கூல் |
| 24 | I | ராமலிங்கபுரம் | சேவர்ட்ஸ் சாரணர் படை சேவர்ட்ஸ் உயர்நிலைப்பள்ளி |
| 25 | III | தேவகோட்டை | N. S. M. V. P. S. உயர்நிலைப்பள்ளி சாரணர் குழாம் |
| 26 | II | ஸ்ரீவில்லிபுத்தூர் | ஊரணிப்பட்டி பாலவீரர் முனிசிபல் ஆரம்பப்பள்ளி |
| 27 | IV | தேவகோட்டை | ஈஸ்வரர் சாரணர் படை திருவேங்கடமுடையான் வித்தியாசாலை |
| 28 | IV | சிவகெங்கை | இராஜா உயர்நிலைப்பள்ளி சாரணர் குழாம் |
| 29 | I | அழகாபுரி | திலகர் திரிசாரணர் குழு அழகாபுரி |

| | | | |
|---|---|---|---|
| 30 | I | பள்ளத்தூர் | மோதிலால் குழாம் |
| 31 | I | கொத்தமங்கலம் | உலகநாயகி சாரணர் குழாம் |
| 32 | I | செட்டிநாடு | இராமகிருஷ்ண திரிசாரணர் குழு |
| 33 | I | கண்டனூர் | சிட்டாள் ஆச்சி சாரணர் படை C. A. M. உயர்நிலைப்பள்ளி |
| 34 | I | கானாடுகாத்தான் | இலக்குமி சாரணர் தொகுதி |
| 35 | I | அரளிக்கோட்டை | போர்டு ஆரம்பப்பள்ளி பாலவீரர் |
| 36 | III | ஸ்ரீவில்லிபுத்தூர் | சிவகுருநாத ஆரம்பப்பள்ளி பாலவீரர் |
| 37 | I | பாகனேரி | வ. உ. சிதம்பரம் பிள்ளை சாரணர் படை போர்டு நடுநிலைப்பள்ளி |
| 38 | II | பள்ளத்தூர் | சோலையப்பா பாலவீரர் சீதை ஆச்சி உயர்தர ஆரம்பப்பள்ளி |
| 39 | I | அரண்மனைசிறுவயல் | ஆனந்தமோகன் திரிசாரணர் குழு |
| 40 | I | சிவகாசி (No. 77) | முனிசிபல் அண்ணாவி தோட்டம் உயர்தர ஆரம்பப்பள்ளி |
| 41 | II | ,, | நேதாஜி சாரணர் படை அம்மன் கோவில்பட்டி முனிசிபல் ஸ்கூல் |
| 42 | III | ,, | சிவாஜி சாரணர் படை S. H. N. V. உயர்தர ஆரம்பப்பள்ளி |
| 43 | IV | ஸ்ரீவில்லிபுத்தூர் | வில்லி சாரணர் படை S. M. S. உயர்நிலைப்பள்ளி |
| 44 | II | ராமநாதபுரம் | சேதுபதி சாரணர் குழாம் இராஜா உயர்நிலைப்பள்ளி |
| 45 | I | கல்லல் | முருகப்பா குழாம் முருகப்பா உயர்நிலைப்பள்ளி |
| 46 | I | திருத்தங்கல் | போர்டு உயர்தர ஆரம்பப்பள்ளி சாரணர் குழு |
| 47 | III | காரைக்குடி | காந்திஜி குழாம் முனிசிபல் உயர்நிலைப்பள்ளி |
| 48 | I | மம்சாபுரம் | சிவந்தி விநாயகர் பாலவீரர் சிவந்தி விநாயகர் ஆரம்பப்பள்ளி |
| 49 | II | ,, | நாடார் உயர்தரப்பள்ளி சாரணர் குழாம் |
| 50 | II | சாத்தூர் | பாரதி சாரணர் படை A. V. உயர்நிலைப்பள்ளி |
| 51 | II | கல்லல் | நேதாஜி பாலவீரர் போர்டு உயர்தரப்பள்ளி |
| 52 | II | கீழச்சிவல்பட்டி | மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் உயர்நிலைப்பள்ளி சாரணர் குழு |
| 53 | V | சிவகெங்கை | தேவி சாரணர் குழு |
| 54 | VI | ,, | இராமகிருஷ்ண பாலவீரர் இராமகிருஷ்ண ஆரம்பப்பள்ளி |
| 55 | IV | காரைக்குடி | சிவாஜி சாரணர் படை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வராள் உயர்நிலைப்பள்ளி |
| 56 | II | அருப்புக்கோட்டை | படேல் பாலவீரர் தேவாங்கர் டவுண் எலிமெண்டரி ஸ்கூல் |
| 57 | I | அலவாக்கோட்டை | நாராயண பாலவீரர் நாராயணன் செட்டியார் ஸ்கூல் |
| 58 | IV | காரைக்குடி | பரதன் பாலவீரர் 1-வார்ட் முனிசிபல் ஸ்கூல் |
| 59 | V | ,, | ஜெயங்கொண்டார் பாலவீரர் 2-வார்ட் முனிசிபல் ஸ்கூல் |
| 60 | VI | ,, | கமலாநேருபாலவீரர் 3 ,, ,, |
| 61 | VII | ,, | சித்தரஞ்சன்பாலவீரர் 5 ,, ,, |
| 62 | VIII | ,, | சிவாபாலவீரர் 13 ,, ,, |
| 63 | IX | ,, | நேருபாலவீரர் 14 ,, ,, |
| 64 | X | ,, | பாரதி பாலவீரர் 15 ,, ,, |

| | | | |
|---|---|---|---|
| 65 | XI | ,, | ஹனுமான்பாலவீரர் 17 ,, ,, |
| 66 | XII | ,, | அழகப்பா குழாம் Dr. அழகப்பா டிரைனிங் காலேஜ் மாடல் ஹைஸ்கூல் |
| 67 | I | ஆராச்சிப்பட்டி | ஆராச்சிப்பட்டி உயர்தர பள்ளி குழாம் |
| 68 | VI | விருதுநகர் | St. ஊதர்ஸ் கள்ளார் குழாம் C. S. M. Boarding Home |
| 69 | II | மானாமதுரை | D. M. G. R ஊகர்ஸ் குழாம் மிஷன் காம்பவுண்ட்-D. M. G. R. Boarding School |
| 70 | I | மங்காபுரம் | மங்காபுரம் கள்ளார் ஸ்கூல் பாலவீரர் |
| 71 | I | சத்ரபட்டி | சத்ரபட்டி கள்ளார் ஸ்கூல் பாலவீரர் |
| 72 | I | காளையார்கோவில் | பாரதி சாரணர் படை போர்டு உயர்தரப்பள்ளி |
| 73 | I | சூசையப்பர் பட்டணம் | முனிவர் சாரணர் படை சூசைமாமுனிவர் உயர்நிலைப்பள்ளி |
| 74 | II | கமுதி | பாரத் சாரணர் படை போர்டு ஹைஸ்கூல் |
| 75 | VII | சிவகெங்கை | யங்இந்தியா திரிசாரணர் குழு |
| 76 | I | ஓ. சிறுவயல் | யுவ பாரத் குழாம் |
| 77 | IV | சிவகாசி முன் (No. 40) | முனிசிபல் அண்ணாவித்தோட்டம் உயர்தரப்பள்ளி சாரணர் குழு |
| 78 | I | இளையரம்மை | நாடார்ஸ் மகமை ஹைஸ்கூல் சாரணர் குழு |
| 79 | II | சத்ரபட்டி | போர்டு நடுத்தரப்பள்ளி சாரணர் குழு |
| 80 | I | அபிராமம் | முஸ்லீம் உயர்நிலைப்பள்ளி சாரணர் குழு |
| 81 | I | தளவாய்புரம் | தளவாய் நாடார்ஸ் P. M. மாரிமுத்து நாடார் உயர்நிலைப்பள்ளி சாரணர் குழு |
| 82 | | நாட்டரசன்கோட்டை | பாரத பாரதி குழாம் முன் No. 12 உடன் சேர்க்கப்பட்டது |
| 83 | II | திருத்தங்கல் | போர்டு உயர்நிலைப்பள்ளி சாரணர் குழு |
| 84 | I | ஆ. தெக்கூர் | S. V. K. உயர்நிலைப்பள்ளி சாரணர் குழு |
| 85 | I | புளியம்பட்டி | இந்தியன் நேஷனல் பால்வீரர் தேவாங்கர் ஆரம்பப்பள்ளி. |



Our A. D. C.

# நன்றி

இம்மலரின்மூலம் நம் மாவட்டத்தில் சாரணீயம் செய்துள்ள செயல்களை ஓர் அளவே கொடுக்க முடிந்திருக்கிறது. பரந்த நிலப்பரப்பில் பலர் அவ்வப் பொழுது ஆங்காங்கு ஆக்கம் பெற்ற சாரணர் சங்கங்களில் பெரும் பணிகள் ஆற்றி உள்ளனர். குறுகிய காலத்தில் இம் மலர் தொகுக்கப்பெற்றதால் பல எங்கட்கு தெரியாது இடம் பெருது போயிருக்கலாம் அதனைக் கருத்தில் கொள்ளாது சாரண உலகில் நம் மரவட்டம் முன்னணியில் நிற்க ஆவன புரியுமாறு கேட்டுக்கொள்ளு கிறேன்.

இருபத்தைந்து ஆண்டுகளாக இச்சங்கத்திற்குப் பணிபுரிந்த யாவர்க்கும் இம் மலரை அழகாகவும் வெள்ளி விழாச் சிறப்புறவும் உதவிபுரிந்த வெள்ளி விழாக் குழுவினருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தங்கள் ஊழியன்,

**அரு. அருணசலம்,**

**செயலாளர்.**

477.21195.K N27 N64
219836



Scout Masters Training Camp at, Pondiankottai.

# GOLDEN HILLS ESTATES, LIMITED.

## Erinkadu Estade.

**Estate Office :**

KATARY P. O.
NILGRIS
Grams: 'ERINKADU'
Phone : 2214

**Head Office :**

14, VALLABAI ROAD,
Tallakulam P. O.
Madurai.
Grames : 'ERINKADU',
Phone : 3067

OUR HIGH GROWN

NILGRI TEAS

NEED NO PRAISE

Once used Always Wanted.

**Just Try & Be Gonvinced.**

**Excellent Quality. Elevation 6750 Ft.**

**Family Mixture Our Speciality**

Managing Agents:

S. S. N. Lakshmanan Chettiar & Sons.

தந்தி: மஹாலெக்ஷிமி மதுரை. டெலிபோன்: 74.

# மஹாலெக்ஷிமி டெக்ஸ் டைல் மில்ஸ் லிமிடெட்.

பசுமலை, மதுரை.

22,500 கதிர்கள்.

★

16 நெம்பர் முதல் 40 நெம்பர்வரை கைத்தறிகளுக்கும்.
இயந்திரத் தறிகளுக்கும் தேவையான
முதல்தர பாவு நூல்கள்
தயாரிக்கப்படுகின்றன.

★

மானேஜிங் ஏஜண்டுகள்:

## செ. சி. நா. லெக்ஷ்மணன் செட்டியார் அன்கோ,

பசுமலை, மதுரை.

யுனைட்டெட் பிரிண்டர்ஸ், காரைக்குடி.